Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

உலகில்
215 நாடுகளையும், 138 600 ஊழியர்களையும்,
50 000 க்கும் மேற்பட்ட முகவர்நிலையங்களையும்
தனது சேவையில் உள்ளடக்கிய
FedEx Express
உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள உங்கள்
உறவுகளுக்கு கடிதங்கள், பொதிகள் மற்றும்
ஏனைய அன்பளிப்புப்பொருட்களை
துரிதமாகவும்,விரைவாகவும்,பாதுகாப்பாகவும்
உத்தரவாதத்துடன் அனுப்பி..
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 222 7835
(சி-13509)

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை-21 | 06-12-2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை-292

## ஆயுதக்குழுக்கள் அற்ற நிலையில்

# இராணுவத்தின் நெருக்குதல் குறைந்தாலே மக்கள் கிளர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியும்

### ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசேட தூதுவரிடம் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

*ஆயுதக் குழுக்கள் இல்லாத நிலை உருவாகி இராணுவத்தினர் மக்கள் மீதான நெருக்குவாரங்களைக் குறைத்தால் மட்டுமே மக்கள் கிளர்ந்தெழுகின்ற நிலையைக் கட்டுப்படுத்த முடியும். இவ்வாறு ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுவின் எதேச்சையான சட்டத்திற்கு அப்பாற்பட்ட கொலைகளுக்கான விசேட தூதுவர் பிலிப்அலஸ்ரன் அடங்கிய குழுவினருடனான சந்திப்பின் போது தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கருத்து வெளியிட்டுள்ளார்.*

இச்சந்திப்பின் போது அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்: விடுதலைப்புலிகள் நிராயுத பாணிகளாக இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளுக்குள் சென்று அரசியல் வேலைகளில் ஈடுபட்டு வந்த நாட்களில் மக்களுடன் தொடர்பு கொண்டு உறவாடி மக்களுடைய நிலைமைகளை அவதானித்து அவர்களுடன் செயற்பட்டு வந்தார்கள். ஆனால் பின்னர் ஆயுதக் குழுக்களின் வன்முறை அதிகரித்து அக்குழுக்களும் இராணுவத்தினரும் இணைந்து எமது இருநூறுக்கு மேற்பட்ட போராளிகள்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் நேற்று இராணுவ அரணை அகற்ற போராட்டம்

### - மாணவர் மீது இராணுவம் தடியடி

(வடமராட்சி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் பாரிய மண் அணைகளை இராணுவத்தினர் அமைத்து வருவதைக் கண்டித்தும், மாணவர்கள் மீதான காட்டுமிராண்டித்தனத்தைக் கண்டித்தும் மாணவர்கள் நேற்று இரண்டாம் நாளாக போராட்டம் நடத்தினர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்குச் செல்லும் பாதையிலுள்ள முன்னரங்க காவலரண் முன்பாக நேற்று திங்கட்கிழமை காலை 7.00 மணியளவிலிருந்து மாணவர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தில் தொடர்ந்து ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை, வட இந்து மகளிர் கல்லூரி,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் மீதான தாக்குதலுக்கு கண்டனம் போராட்டத்தைத் தொடரத் தீர்மானம்!

### - யாழ்.மாவட்ட மாணவர் ஒன்றியம் அறிக்கை

(வடமராட்சி)

வடமராட்சியில் மாணவர்கள் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல்களைக் கண்டித்து யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளதோடு இராணுவ ஆக்கிரமிப்பு அகலும் வரை போராட்டத்தைத் தொடருவதென்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமைதியாக ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர்கள் மீது அடக்குமுறைகளைப் பிரயோகித்த இராணுவத்தினரின் மிலேச்சத்தனமான செயல் மாணவர்களை ஆத்திரமூட்டுவதோடு எதிர்காலத்தில் மாணவர்களினுடைய பாதுகாப்பிற்கும் கேள்விக்குறியாக அமைகின்றது. கடந்த பல ஆண்டுகளாக முட்கம்பி வேலிகளுக்குள் எம்மை முடக்கி எம் சந்ததியின் கல்வி நிலையினை வீழ்ச்சியடைய வைக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நீர்வேலியில் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். நீர்வேலிப் பகுதியில் இளைஞர் ஒருவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்றுக்காலை நீர்வேலி வில்மதவடி இராணுவ முகாமிற்கு முன்பாக காவலரணில் காவலில் இருந்த படையினர் அவ்வீதியூடாக பயணித்த இளைஞன் ஒருவரையே கைது செய்துள்ளனர்.

இக்காவலரணில் நிற்கும் படையினர் அவ்வீதிவழியாக செல்லும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.சம்பவங்களுக்கு புலிகள் மீது குற்றம் சாட்ட சாட்சியங்கள் இல்லை

### -கண்காணிப்புக் குழு

யாழ்.இல் நடைபெறும் சம்பவங்களுக்கு விடுதலைப்புலிகள் மீது குற்றம்சாட்டுவதற்குப் போதிய சாட்சியங்கள் இல்லை என்று இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் கூறியுள்ளதாவது: கடந்த மூன்று நாட்களில் யுத்த நிறுத்த உடன்படிக்கை பத்து முறை மீறப்பட்டுள்ளது.

கடந்த 48 மணிநேரத்தினுள் ஒன்பது சிறிலங்கா இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். பல இராணுவ வீரர்களும் பொதுமக்களும் படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த மூன்று நாட்களாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை விடுதலைப்புலிகளே செய்தார்கள் என்று கூறுவதற்கான சாட்சியங்கள் எதுவும் கிடைக்கவில்லை என்றார் அவர்.

கோண்டாவில் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலானது யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பின்னர் ஏற்பட்ட மிக மோசமான சம்பவம் என்று சிறிலங்கா இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

## தனங்கிளப்பில் துப்பாக்கிவேட்டுச் சத்தம்

யாழ். தனங்கிளப்பை அண்டியுள்ள கடற்கரையோரப் பிரதேசத்தில் நேற்று இரவு 8.30 மணியளவில் துப்பாக்கிச்சூட்டு சத்தங்கள் சரமாரியாக கேட்ட வண்ணம்மிருந்ததாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

இதனையடுத்து படையினரும் தமது அரண்களில் இருந்தவாறே கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகம்செய்ததுடன் பரா வெளிச்சம் பாய்ச்சி தேடுதலை மேற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மீசாலையில் கைக்குண்டு வீச்சு சிப்பாய் பலி; இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மீசாலையில் நேற்று இரவு ஏழு மணியளவில் நடைபெற்ற இருவேறு தாக்குதல் சம்பவங்களில் ஒரு இராணுவச்சிப்பாய் உயிரிழந்துள்ளதுடன் இரு சிப்பாய்கள் காயமடைந்துள்ளனர்.

மீசாலை புதிய ஸ்ரேசன் பகுதியில் கண்டிவீதி வழியாக பயணித்துக்கொண்டிருந்த இராணுவ விநியோக வாகனம் ஒன்றின் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் வாகனத்தில் பயணம் செய்த ஒருவர் உயிரிழந்ததுடன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம் - புலிகள் சந்திப்பு இன்று அல்லது நாளை நடைபெறலாம்

### - கண்காணிப்புக்குழுத்தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான ஒத்திவைக்கப்பட்ட பேச்சுவார்த்தை இன்று அல்லது நாளை நடைபெறலாமென யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப்ஹொக்லண்ட கூறியுள்ளார்.முகமாலையில் நேற்று மாலை நடைபெறவிருந்த இந்தப் பேச்சுவார்த்தை இறுதி நேரத்தில் இராணுவத்தினரால் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. தெரிந்ததே.

### -சுனில் தென்னக்கோன் - இளம்பரிதி சந்திப்பு-

## அரச சமாதான செயலக நிகழ்ச்சி நிரல் கிடைக்காததால் நடைபெறவில்லை

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் படைத் தளபதிகளுக்கும் இடையில் நேற்று முகமாலை சூனியப் பிரதேசத்தில் நடைபெறவிருந்த சந்திப்பு இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலைமை பற்றி தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளருடன் பேசுவதற்கு விரும்புவதாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

## ஆங்கில வகுப்பு ஆரம்பம்

சிறுவர்களுக்கான ஆங்கிலப் பேச்சு வகுப்பு ஆரம்பம். காலம் 07.12.2005 (நாளை) நேரம் காலை 7மணி ஆசிரியர் இ.றஜித் இடம். அரசவைத்தியசாலை அரு காமை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு. (7075)

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
இலங்கை கணனிகள் சங்கத்தினால் நடத்தப்படும் பரீட்சை

Srilankan Computer Driving Liecence

**வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.**
**தொடர்புகட்கு:**
**வின்நெற் கணனி பயிற்சி நிலையம்**
**டிப்போ வீதி, கிளிநொச்சி**
(சி.13074)

# யானையின் தாக்குதலிலிருந்து உயிர்தப்பிய பிரயாணி

(நமது நிருபர்)

கண்டிவீதியில் பழையமுறிகண்டிப்பகுதியில் காட்டு யானைகளின் நடமாட்டங்கள் அதிகரித்துள்ளதால், வீதியூடாகப் பயணிப்பவர்கள் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைய மழைக்காலங்களின் பின்னர் அதிகரித்துள்ள காட்டுயானைகளின் நடமாட்டம் காரணமாக கண்டி வீதியூடாக பயணிக்கும் பிரயாணிகள் அச்சுறுத்தல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

நேற்றையதினம் காலை நான்கு மணிக்கு சென்ற ஒருவருக்கு பழைய முறிகண்டிப்பகுதியில் எதிர்பாராத வகையில் யானை ஒன்றிடம் இருந்து உயிர்தப்பிய அனுபவம் ஏற்பட்டுள்ளது.

உந்துருளியில் சென்று கொண்டிருந்த இவரை எதேச்சையாக வீதிக்கு குறுக்கே வந்த யானை தாக்க முற்பட்டபோது அவர் தனது உந்துருளியை நிதானமாகச் செலுத்தி அவ் ஆபத்திலிருந்து உயிர்தப்பியதாகத் தெரிவித்தார்.

இவ்வாறாகப் பல பிரயாணிகள் யானைக்கூட்டங்களை எதிர்பாராமல் எதிர்கொண்டு உயிர்தப்பிய சம்பவங்கள் அப்பகுதியில் இடம்பெற்றிருக்கின்றன. (செ)

MEDECINS DU MONDE

# Advertisement for Construction Engineer or Architect

MDM is a non-governmental organization intervening solely for humanitarian purposes. MDM is working in the Mallavi hospital in the MUllaitivu District in the Northern province of sri Lanka.

MDM is looking for a construction engineer or architect for the Mallavi hospital rehabilitation.

**Responsibility**

The engineer is in charge of the supervision of 6 teams of masons, 2 teams of carpenters and 2 teams of electricians and water supply.
The engineer is in charge of update the plan and designs the new construction.

**Qualifications**

- University Degree in engineering or architecture.
- Strong work ethic and desire to improving health structure in sri Lanka.
- Computer literacy in Microsoft Word, Excel, and Access.
- Excellent references.
- Excellent communication and organizational skills.

Excellent written and Verbal English language.

**To apply**

Visit directly the MDM Office in Mallavi from Monday 5 th December to Friday 9 th of December with a CV.

(7070)

# "கலைமழலை" வெளியீட்டு விழா

மாங்குளம் மகாவித்தியாலயத்தின் "கலை மழலை" சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று செவ்வாய்கிழமை பி.ப2.00 மணியளவில் பாடசாலைக் கேட்போர் கூடத்தில் திருமதி செ.விஜயகுமார் (அதிபர்) தலை மையில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே. குருஸ் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

# வடக்கு-கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டம்

**பயனாளிகளை தெரிவு செய்ய ஆய்வுக்குழு புள்ளிகளை வழங்கும் அதன் போது பின்வரும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.**

**01 மீளத்திரும்பிய வருடம்**

**02 குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை**

**03 பெண் தலைமைத்துவக் குடும்பம்**

**04 குடும்பத்தில் ஊனமுற்றோர் எண்ணிக்கை**

**05 குடும்பத்தில் முதியோர் எண்ணிக்கை**

**06 யுத்தத்தால் இறந்த/காணாமல் போன குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை**

**07 உதவியற்ற சிறுவர்/ஆதரவற்றோர் எண்ணிக்கை**

**வீடழிவு சமூக நிலை ஆய்வு மதிப்பீட்டுப்படிவத்தில் வழங்கப்படும் தரவுகள் கணணிமயப்படுத்தப்பட்டு பிரதேச செயலர்களால் வரிசைக்கிரமப்படுத்தப்பட்டு குடும்ப நிரல் வெளியிடப்படும். இதற்கு கிராம புனரமைப்புக் குழுவின் உதவியை பிரதேச செயலர்கள் பெற்றுக்கொள்வர்.**

**தெரிவு செய்யப்பட்டவர்களது பெயர்ப்பட்டியல் பிரதேச செயலர்களால் பொதுமக்களின் பார்வைக்கு பொது இடங்களில் பகிரங்கமாக வைக்கப்படும். முற்றாக/பகுதியாக அழிவுற்ற வீட்டுடையவர்களின் பெயர்கள் வெவ்வேறாக காட்சிக்கு வைக்கப்படும். இதன் மூலம் பிரதேச செயலர்கள் பொதுமக்களின் அவதானிப்புக்களை பெற்றுக்கொள்வார்கள்.**

(சி.13464)

**மேலும் விபரம்-நாளைய பத்திரிகையில்**

# காவலாளி தேவை

**கிளிநொச்சி நுண்கலைக்கல்லூரிக்கு முழுநேரமாய் நின்று வேலை செய்யக்கூடிய காவலர் ஒருவர் தேவைப்படுகின்றார். ஊதியம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். அலுவலக நேரம் 9.00 மணியிலிருந்து , கிளி நுண்கலைக் கல்லூரிக்கு வேலை செய்ய விரும்புவோர் சமுகம் தரவும்.**

(சி-13431) ***அதிபர், கிளி/நுண்கலைக்கல்லூரி***

# நூல் அறிமுக விழா

**முனைவர் கு. அரசேந்திரன் அவர்களின்**
**தமிழ்க்கப்பல், தமிழறிவோம் ஆகிய நூல்களின்**

## அறிமுகவிழா

*இடம் :- புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக் கலையரங்கம்.*
*காலம் :-2005. 12. 07*
*நேரம் :- காலை 10. 00 மணி.*

இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**விழாஏற்பாட்டுக்குழு**

(6439)

## நல்லூர் பிரதேச சபை
## சந்தைகள் குத்தகைக்கு விடுவதற்கான
# மீள் கேள்வி அறிவித்தல் - 2006

28.10.2005, 9.11.2005 24.11.2005ஆம் திகதி உதயன்,தினக்குரல், ஈழநாதம் ஆகிய பத்திரிகைகளில் செய்யப்பட்ட விளம்பரங்களுக்கு அமைவாக பின்வரும் சந்தைகளை குத்தகைக்கு விடுவதற்கான மீள் கேள்வி என்னால் கோரப்படுகின்றது.

| விபரம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய (வந்தவிர்ந்த) ஆகக்குறைந்த தொகை |
|---|---|
| 01. திருநெல்வேலிச்சந்தை துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன் | ரூபா 3950,615. 00 |
| 02. பலாலி வீதி, ஆடிய பாதம் வீதி, பாடசாலை வீதி, வாகனத்தரிப்பிட கட்டணம் (வாகனத்தரிப்பிட குறியீட்டில் மட்டும் நிறுத்தல் வேண்டும்) | ரூபா 100,000. 00 |
| 03. கொக்குவில் குளப்பிட்டிச்சந்தை துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன் | ரூபா 179,073. 00 |

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி 09.12.2005 வெள்ளி மு.ப. 12.00மணிவரை**
**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி 12.12.2005 திங்கள் மு.ப. 12.00 மணிவரை**
**கேள்வி திறக்கும் திகதி 12.12.2005 திங்கள் பி.ப 2.00 மணிவரை**

மேற்படி கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(சி-13429)



ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் உள்ள முக்கிய விடுதிகளில் இதுவும் ஒன்று. இது அண்மையில் 2,500 கோடி ரூபாவுக்கு ஏலம் விடப்பட்டது.

# அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் இந்த வாரம் ஐரோப்பா பயணம்

## சி.ஐ.ஏ சிறை விவகாரத்தினால் முக்கியத்துவம் பெறும் விஜயம்

(வோஷிங்டன்)

**ஐரோப்பிய நாடுகளில் அமெரிக்காவின் உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.யின் இரகசிய சிறைகள் இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொண்டலீசாரைஸ் இந்த வாரம் ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.**




சி.ஐ.ஏ விடயம் தொடர்பாக ஐரோப்பிய நாடுகள் கவலை தெரிவித்துள்ளன.

இந்த நிலையில் ஐரோப்பிய நாடுகளுக்கான கொண்டலீசாரைசினுடைய பயணம் முக்கியத்துவம் பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்கா கைதிகளை விசாரணை செய்வதற்கு வேறு நாடுகளுக்கு அனுப்பி வைக்காது என இந்த பயணத்தின் போது உறுதியளிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அமெரிக்காவிடம் இருந்து அதிகார பூர்வமான தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.



இப்படத்தில் பெரிதாக இருப்பது டையன நிலவு ஆகும். அடுத்து சிறிதாக இருப்பது டைட்ரிஸ் நிலவு ஆகும். காசினியின் விண் கலத்தின் அதி நவீன புகைப்படக் கருவி இதனைப் படம் பிடித்துள்ளது.

# ஈரானின் பெற்றோலியத்துறை அமைச்சராக புதியவரின் பெயர் பிரேரிப்பு

ஈரானின் முக்கியமான பெற்றோலியத்துறையமைச்சர் பதவிக்கு புதியவர் ஒருவர் பெயரை அந்நாட்டைச்சேர்ந்த சனாதிபதி பிரேரித்துள்ளார்.

முன்பதாக சனாதிபதியால் பிரேரிக்கப்பட்ட மூன்று பேரின் பெயர்களை அந்நாட்டுப் பாராளுமன்றம் நிராகரித்ததையடுத்து நான்காவதாக புதியவர் ஒருவரை ஈரான் சனாதிபதி பிரேரித்துள்ளார்.

தற்போதைய பெற்றோலியத்துறை பதில் அமைச்சராகவும் முன்னாள் அரசாங்கத்தின் துணை அமைச்சராகவுமிருந்தவரே இந்தப்பதவிக்கு பிரேரிமிக்கப்பட்டுள்ளார். கடந்த சனாதிபதித் தேர்தலுக்கான தமது பிரச் சாரத்தின்போது பெற்றோலியம் சம்பந்தப்பட்ட விடயத்தை முக்கிய விடயமாக முன்வைத்த ஈரான் சனாதிபதி அகமது நியாட் அதன் மூலமான வருமானம் மேலும் நியாயமாகப் பகிரப்படும் என்றும் அந்தத்துறைக்கான முகாமைத்துவம் மறுசீரமைக்கப்படும் என்றும் உறுதியளித்திருந்தார்.

# காங்கிரஸ் வழிகாட்டல் குழுவிலிருந்து நட்வர்சிங் திடீரென நீக்கம்

(புதுடில்லி)

இந்திய மத்திய அமைச்சர் நட்வர்சிங் காங்கிரஸ் கட்சியின் வழிகாட்டுதல் குழுவிலிருந்து திடீரென நீக்கப்பட்டுள்ளார்.

டில்லியில் சோனியாகாந்தி தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காங்கிரஸ் வழிகாட்டுதல் குழுக்கூட்டத்தின் போதே இந்தத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

# ஏரிகளிலிருந்து நீர் வெளியேற்றம் சென்னை வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளது

(சென்னை)

மழை காரணமாக சென்னையை அண்மித்த பல்வேறு ஏரிகளிலிருந்து திறந்து விடப்படும் நீரால் சென்னையில் பலபகுதிகளும் அதன் புறநகர்ப் பகுதிகளும் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன. அப்பகுதிகளில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

செம்பரபாக்கம் ஏரியிலிருந்து பெருமளவு தண்ணீர் திறந்து விடப்படுவதால் அடையாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

செம்பரம்பாக்கம் ஏரி திறந்து விடப்பட்டதன் காரணமாக குன்றத்தூர், கோட்டூர், மணப்பாக்கம், நந்தம்பாக்கம் ஷாபர்கான் பேட்டை சைதாபேட்டை ஆகிய பகுதிகளில் வெள்ளம் புகுந்துள்ளது.


# கொங்கொங்கில் அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை; திட்டத்தை உருவாக்க தலைமை நிர்வாகி முயற்சி

கொங்கொங்கில் மக்கள் அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமையை ஏற்படுத்தும் திட்டத்தை உருவாக்க தமது நிர்வாகம் தீவிரமாக செயற்படுவதாக கொங்கொங்கின் தலைமை நிர்வாகி தெரிவித்துள்ளார்.


அனைவருக்கும் வாக்குரிமை என்பதை ஒழுங்கான முறையில் கொண்டு வருவதற்கு தான் விரும் புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொங்கொங்கின் வாக்களிப்பில் சிறியளவிலான மாற்றங்களை மட்டும் கொண்டு வரும் ஒரு திட்டத்தை அதிகாரிகள் முன்மொழிந்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்லாயிரக் கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர் அதன் பின்னர் உரையாற்றும்போது அவர் இதனைக் கூறினார்.

கொங்கொங்கின் ஆட்சியாளர்களைத் தெரிவு செய்யும் தேர்வு விரிவாக்கப்படுவதும் தற்பொழுது முன்மொழியப்பட்ட திட்டத்தில் அடங்குகின்றது. அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்படுவதற்கு கால வரையறை நிர்ணயிக்கப்பட வேண்டு மென்றும் அவர்கள் கோரியிருந்தார்கள். ஆனால் காலவரையறை நிர்ணயிக்கப்படுவதை சீன அரசு தடுத்துள்ளது.



மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் அண்மையில் நடந்த இந்துக்களின் 'உதாமா பட்சா' திருவிழாவில் திரண்ட பல்லாயிரக்கணக்கான இந்துக்களில் ஒருபகுதியினர்.



ராஜஸ்தான் மாநிலத்தில் நடந்த கால் நடைகளின் திரு விழாவில் இடம்பெற்ற ஒட்டகங்களின் கண்காட்சி.

# தென்கொரிய அரசாங்கத்திற்கு எதிராக தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

(சியோல்)

தென்கொரிய அரசாங்கத்திற்கெதிராக பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டப்பேரணியொன்றை நடத்தினர்

தென்கொரியாவில் பகுதி நேர தொழிலாளர்களின் உரிமை தொடர்பாக அந்நாட்டு அரசு புதிய சட்டமூலம் ஒன்றைக்கொண்டு வரமுடிவு செய்துள்ளது. அதேவேளை வெளிநாடுகளில் இருந்து அரிசி இறக்குமதியை அதிகரிக்கவும் அந்நாட்டு அமைச்சரவையில் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

அரசின் இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தலைநகர் சியோலில் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களும் விவசாயிகளும் பேரணி நடத்தியுள்ளனர்.

விவசாய நிலங்களைப் பாதுகாக்கவும் முறைசாரா தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் தாம் ஒன்று கூடியிருப்பதாக ஆர்ப்பாட்டக்காரார்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப்பேரணியை கலைக்க பொலிசார் முயன்றபோது இருதரப்பினரிடையேயும் கடும் மோதல் ஏற்பட்டதாகத்தெரிவிக்கப்படுகின்றது இதனைத் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டோரை விரட்டியடிக்க பொலிசார் தண்ணீர் பாய்ச்சியுள்ளனர். ஆர்ப்பாட்டக்காரார்களும் பொலிசார் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.



இந்தியாவின் புதுவை மாநிலத்தில் நடந்த விழா ஒன்றில் தரையையொட்டிப் பறந்து சாகசம் நிகழ்த்திய விமானம் ஒன்று

# வடஅயர்லாந்து அதிகாரியை ஈராக் அனுப்புகிறது பிரிட்டன்

(லண்டன்)

வட அயர்லாந்து தகவல்துறை முன்னாள் தலைமை அதிகாரியை ஈராக்கின் தென்பகுதி நகரான பஸ்ராவிற்கு அனுப்புவதாக பிரிட்டன் அரசு அறிவித்துள்ளது.

ஈராக்கின் தென்பகுதி நகரான பஸ்ராவில் காவல்படைக்குள் கிளர்ச்சியாளர்கள் ஊடுருவுகின்றார்கள் என்ற முறைப்பாடு அதிகரித்து வருவதை அடுத்தே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

பஸ்ராவில் காவல்துறையை மதிப்பீடு செய்து அங்கு பயனுள்ள நடுநிலையான நம்பகரமான ஒரு காவல்படையை உருவாக்குவது எப்படி என்பது குறித்து அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

# இராணுவ மண் அரண்கள் அகற்றப்படாததால் விவசாய நடவடிக்கைகள் பாதிப்பு

(அலுவலகசெய்தியாளர்)

***இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட மண் அரண்கள் அகற்றப்படாததனால் நெற்செய்கைக்குரிய பல ஏக்கர் காணிகள் பயிரிடப்படாதுள்ளதாகவும் செய்கை பண்ணப்பட்டுள்ள பயிர்களும் பாதிப்புக்குள்ளாவதாகவும் பூநகரிப் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.***

கடந்த காலத்தில் இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளாகியிருந்த பூநகரிப்பிரதேசத்தின் பல பகுதிகளில் இராணுவத்தினர் மண் அரண்களை அமைத்திருந்தனர். இம் மண் அரண்கள் மக்களின் குடியிருப்புப் பகுதிகளிலும் நெற்செய்கை நிலங்களிலும் பாரியஅளவில் அமைக்கப்பட்டிருந்தன. இப்பகுதி மீட்கப்பட்டு மக்கள் மீளக்குடியேறியுள்ள நிலையில் அம்மண் அரண்களின் சிலபகுதி அகற்றப்பட்டன. ஆனால் இன்னமும் பல பகுதிகள் அகற்றப்படாததனால் அங்கு நெற்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என மக்கள் கவ்லை தெரிவிக்கின்றனர்.

இப்பகுதி மக்களின் பிரதான தொழில் மீன் பிடியாக இருந்த போதும் குறிப்பிட்ட சில பகுதிகள் விவசாயத்தை நம்பிய பகுதிகளாக உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அத்தோடு இம்மண் அரண்கள் மற்றும் அதனையண்டிய பகுதிகளில் ஏற்கனவே மிதிவெடிகள், கண்ணி வெடிகள் என்பன அகற்றப்பட்டுள்ளமையும் நோக்கத்தக்கது. (ச)

# லொத்தர் சீட்டு விற்கும் சிறிலங்கா இராணுவம்

(முகமாலை)

முகமாலையில் சிறிலங்கா இராணுவத்தினர் அதிஷ்டலாபச் சீட்டொன்றை விற்பனை செய்து வருகின்றனர். முகமாலை சோதனைச் சாவடியூடாகச் செல்லும் மக்களிடம் அவர்கள் இவ் அதிஷ்டலாபச் சீட்டை கொள்வனவு செய்யுமாறு கேட்டு வருகின்றனர்.




# மக்களை பதற்றமடையச் செய்த இடியுடன் கூடிய மழை

கடந்த சனிக்கிழமை மாலை 5.00மணிக்கு முல்லைத்தீவில் பெய்த இடியுடன் கூடிய பெருமழையால் தற்காலிக குடியிருப்பு முதல் நிரந்தரமாக வசிக்கும் பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டது. அத்தோடு கடல் புறவெள்ளம் அடித்ததனால் மக்கள் அச்சம் கொண்டனர். மீண்டும் அது பழைய நிலைக்குச் சென்று விட்டது. சுனாமியினால் பாதிக்கப்பட்டு தற்காலிக குடியி ருப்பில் இருக்கும் மக்கள் இம் மழையினால் சிரமத்தை எதிர்கொண்டனர். (20)

# வேலியிட்டு பயிர்செய்யுமாறு விவசாயிகளுக்கு வேண்டுகோள்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய்-பாண்டியன்குளம் பிரதேசத்தில் 2005,2006 பெரும்போகத்தில் சிறிய நீர்ப்பாசன குளங்களின் கீழ் பயிர்ச்செய்கை மேற்கொள்பவர்கள் வேலிபோட்டு பயிர்ச்செய்கை மேற்கொள்ள வேண்டும் என த.பொ.மே. நிறுவனத்தினர் விவசாயிகளுக்கு தெரிவித்துள்ளனர்.

துணுக்காய், பாண்டியன்குளம் பிரதேசத்தில் இருக்கும் சிறிய நீர்ப்பாசன குளங்களின் கீழ் நெற்செய்கை மற்றும் மறுவகைப் பயிர்ச்செய்கை மேற்கொள்பவர்களே தமது பயிர்களை கால்நடைகளின் அழிவில் இருந்து பாதுகாப்பதற்காக வேலி போட்டு பயிர்வகைகளை உற்பத்தி மேற்கொள்ளவேண்டும் எனகேட்கப் பட்டுள்ளனர். பயிர்ச்செய்கை ஆரம்பிக் கப்பட்டுள்ள இந்நிலையில் விவசாயிகள் வேலியை அடைப்பதற்கேற்ற ஒழுங்குகள் தொடர்பாக துணுக்காய், பாண்டியன்குளம் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப்பொறுப்பாளர் ம.இன்பவாணனுடன் மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளு மாறும் பிரதேசப்பொறுப்பாளர் தெரிவித்துள்ளதோடு, கால்நடைக்கட்டுப்பாடு கூட்டத் தீர்மானத்தின் படி தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (46)

# சிரமதானம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி-புதுமுறிப்பு மகாதேவா ஆச்சிரம சைவச் சிறுவர் இல்லத்தில்நேற்று முன்தினம் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப் பட்டன.

சிறுவர் இல்ல நடவடிக் கைக்குழுத் தலைவரும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகத்தின் வேண்டுகைக்கமைவாக புதுமுறிப்பு கிராமசேவை அலுவலர் சிவனேசன் தலைமையில் புதுமுறிப்பு கிராமம் மற்றும் சாலோம் நகர் மக்களால் சிறுவர் இல்ல வளாகத்தில் சிரமதானப் பணிகள் இடம்பெற்றன.

(சோ)

# வீதியைப் புனரமைக்க வேண்டுகை



(அலுவலக செய்தியாளர்)

பூநகரியின் பள்ளிக்குடா தொடக்கம் பற்றிமா மாதா கோயில் வரையான நான்கு கிலோ மீற்றர் வீதியை விரைவாக புனரமைத்துத்தர சம்பந்தப் பட்டவர்களை முன்வருமாறு அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

மேற்படி வீதியானது மீள்குடியமர்விற்குப் பின்னர் புனரமைக்கப்படாத தனால் அவ்வழியி னூடான போக்கு வரத்து முற்றாக தடைப் பட்டுள்ளது. இதற்குப் பதிலாக பற்றிமாமாதா கோயில் பகுதியை அண்டிய பகுதி களில் வசிக்கும் 60 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் கடற்கரையோரமாகவே பயணித்து வருகின்றனர்.

இவ்வாறு மாணவர்கள் மற்றும் ஏனையோரும் காலைவேளை பயணிக்கும்போது கடல்நீர் பெருகியிருப்பதால் பெரும்சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். சில வேளைகளில் கடல் பெருக்கெடுக்குமானால் அப்பகுதியினூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்படுவதுமுண்டு. எனவே இக்கடற்கரையை அண்மித்ததாகவுள்ள வீதியை புனரமைத்தால் மட்டுமே மக்கள் சீரான பயணத்தை மேற்கொள்ள முடியும்.

வீதியை புனரமைத்துத் தருமாறு நாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் பலமுறை கோரிக்கை விடுத்து. வருகின்றோம். எனவே இவ்வீதியை விரைவாகப் புனரமைத்துத் தர சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டுமென அவர் மேலும் கேட்டுள்ளனர்.(ச)

# முல்லைத்தீவு மீனவர்களுக்கு வெளியிணைப்பு இயந்திரம் அன்பளிப்பு

சுனாமியினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுப் பகுதி மீனவர்களுக்கு ஹெயார் நிறுவன நிதியுதவியுடன் மு.மா.க.தொ.சங்க சமாசத்தினால் நேற்றுக்காலை பத்து மணிக்கு மு.மா.க.தொ. சங்க சமாசத்தில் வைத்து 25 வெளியிணைப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டன. இந்த நிறுவனத்தால் மொத்தமாக 75 படகுகள் வழங்கப்பட்டுள்ளதோடு 30 வெளியிணைப்பு இயந்திரங்களும் வழங்கப் பட்டுள்ளன. தற்போது வழங்கிய 25 வெளியிணைப்பு இயந்திரங்களுடன் மொத்தமாக 55 வெளியிணைப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த இயந்திரங்களை மு.மா.க.தொ.சங்க சமாசத் தலைவர் அ.மரியராசா, உபதலைவர் இ.தணி காசலம், செயலாளர் க.செல்வா ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்வில் மீனவர்கள், சமாசப் பணிப்பாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (20)

# ஒன்றரை லீற்றர் கசிப்பை வைத்திருந்தவருக்கு 15 நாள் சிறை; 15,000 அபராதம்

ஒன்றரை லீற்றர் கசிப்பை எடுத்துச் சென்ற நபருக்கு 15 நாள் சிறையும் 15 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது, கடந்த வெள்ளிக்கிழமை வட்டக்கச்சிப் பகுதியில் நபர் ஒருவர் தான் பருகுவதற்கான கசிப்பை எடுத்துச்சென்றவேளை கைதுசெய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டதையடுத்து அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார். இதனையடுத்து மேற்படி நபருக்கு 15 நாள் சிறையும் 15 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.(12)

# குடிநீர்ப் பிரச்சினையால் பூநகரியில் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள்!


பூநகரிப் பிரதேச மக்கள் குடிநீர்ப் பிரச்சினைகளால் வருடாந்தம் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றார்கள். வருடத்தின் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதி என்றில்லாது தொடரும் இப்பிரச்சினைக்குத் தீர்வு கிட்டாதா என மக்கள் அங்கலாய்க்கின்றனர். இப்பிரதேச மக்களின் அவலங்களை நேரில் சென்று அவதானித்த போது அம்மக்களின் நெருக்கடி நிலையின் உண்மைத்தன்மையை உணரமுடிந்தது.

பூநகரி பிரதேசமானது கடற்கரையை அண்டிய பகுதியாகக்காணப்படுவதால் அங்குள்ள கிணறுகளில் குடிநீர் பெறுவதென்பது சாத்தியமற்றதாகவுள்ளது. பொதுவாக அப்பகுதியில் குடிநீரைப் பெறுவதற்கான இடங்கள் இல்லை என்றேகூறமுடியுமென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இதன்காரணமாக அங்குள்ள அனைத்துக்கிராமங்களுக்கும் நீர்த்தாங்கிகள் வைக்கப்பட்டு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

மழைக் காலங்களில் அங்கு இருக்கின்ற ஓரிரு நன்னீர் கிணறுகளில் இருந்து நீர் கொள்கலன்களுக்கு நிரப்பப்பட்டு ஆங்காங்கே மக்கள் குடியிருப்புக்களுக்குள் பொதுவாக வைக்கப்பட்டுள்ள நீர்த்தாங்கிகளில் அப்பகுதி பிரதேச செயலகத்தினரும் மற்றும் அரசசார்பற்ற நிறுவனத்தினரும் நிரப்பி வருகின்றனர்.

இது இவ்வாறிருக்க, ஒரு நாளைக்கு ஒருவருக்கு ஒருகுடம் நீர் என்ற அளவீட்டுக்கேற்பவே குடிநீரைப்பெற்று வருகின்றோம். ஒருகுடத்தில் ஒன்பது லீற்றர் நீரையே நிரப்ப முடியும் என்கிறார் பூநகரி சித்தன் குறிச்சியின் கிராம அபிவிருத்திச்சங்கத்தலைவர். இச்சித்தன் குறிச்சிக் கிராமத்திற்கு அண்மை நாட்களாக குடிநீர் அங்குள்ள நீர்த்தாங்கிகளில் நிரப்பப்படுவதில்லை எனத் தெரிவித்த அவர் அண்மைக்காலமாக பெய்து வரும் கடும் மழை காரணமாக உள்வீதிகளில் வாகனங்களை செலுத்தமுடியாதளவு சேதமடைந்துள்ளதனாலேயே நீர் வளங்கல் தடைப்பட்டிருப்பதாகவும் இதன் காரணமாக அங்குள்ள மக்கள் குடிநீர்தேடி நீண்ட தூரங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை உருவாகியுள்ளதெனவும் கூறுகிறார்.

தமது பகுதிக்கு ஒருமாதகாலமாக குடிநீர் விநியோகம் நடைபெறவில்லை எனக் கூறுகின்றார் கறுக்காய்த் தீவு கிராம அபிவிருத்திச்சங்கத்தலைவர். அண்மைக்காலமாக பெய்து வரும் கடும் மழை காரணமாக கறுக்காய்த்தீவுக்குச் செல்கின்ற பாதைகள் இரண்டும் கடுமையாக சேதமடைந்து விட்டன இவை புனரமைக்கப்படாததால் இப்பகுதிக்குள் குடிநீரை சுமந்து வரும் கனரக வாகனங்களைச் செலுத்த முடியாதுள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் குடிநீருக்காக ஞானிமடம் பகுதியில் வைக்கப்பட்டுள்ள நீர்த்தாங்கிகளை நாடிச் செல்ல வேண்டியுள்ளது. அல்லது இங்கிருந்து நான்கு கிலோமீற்றர் தொலைவிலிருக்கும் சித்தன்குறிச்சிப்பகுதிக்கோ அல்லது ஐந்துகிலோமீற்றர் தொலைவில் இருக்கும் வாடியடிக்கோ சென்றுதான் நீரைப் பெறுகின்றனர் ஆனால் வயதானவர்களை மட்டும் கொண்ட குடும்பங்களைச்சார்ந்தவர்கள் இவ்வாறு நீண்ட தூரம் சென்று நீரைப் பெறமுடியாமல் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதை அன்றாடம் காணக்கூடியதாகவுள்ளது. எமது பகுதிக்கு நாள் ஒன்றுக்கு பத்தாயிரம் லீற்றர் வரையான நீர் தேவையாகவுள்ளது. ஆனால் நாம் நீரினை எடுத்துச்செல்லும் வாடியடி மரக்குறிச்சியில் அமைந்துள்ள கிணற்றிலோ ஐயாயிரம்



லீற்றர் வரையான நீர் தான் அன்றாடம் தேங்கி நிற்கும். இதனால் அங்கும் மட்டுப்படுத்தியே நீரைப்பெறமுடியும் கறுக்காய்த்தீவில் 138 குடும்பங்கள் உள்ளன. இங்கு ஆயிரம் லீற்றர் கொள்ளளவைக்கொண்ட ஆறு நீர்த்தாங்கிகள் வைக்கப்பட்டு நீர் நிரப்பப்பட்டு வருகிறது. ஆனால் எமக்கு பத்து நீர்த்தாங்கிகள் வைக்கப்பட்டாலேயே ஓரளவு தேவையை பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும். எனவே எமது பகுதிக்கான பாதைகள் விரைவில் புனரமைக்கப்பட்டு குடிநீரினை விநியோகிக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டுமென அக்கிராம அபிவிருத்திச்சங்கத்தலைவர் கேட்டுள்ளார்.

இது போன்றே பூநகரியின் ஞானிமடம், நாகதேவன்துறை மற்றும் ஏனைய பல கிராமங்களின் மக்களும் குடிநீரை நீர்த்தாங்கிகளில் இருந்தே பெற்று வருகின்றனர். எனவே பூநகரி பிரதேசத்தில் பல கிராமங்களைப் பொறுத்தவரையில் குடிநீர்க்கிணறுகள் இருந்தால் நீரைப்பெற முடியுமென்ற வழமையான நிலைமாறி வீதிகள் சீராக இருந்தால் மட்டுமே குடிநீரைப் பெறமுடியும் என்ற நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளனர். ஏனெனில் இங்குள்ள உள்ளூர் வீதிகள் புனரமைக்கப்படாவிடின் ஒவ்வொரு மழைக் காலங்களிலும் இம்மக்கள் குடிநீரின்றி அவதியுறும் நிலை ஏற்படலாம்.

இ.சசி

# யாழ்.தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு ஈருருளிகள், உந்துருளிகளில் செல்லத்தடை

(யாழ்ப்பாணம்)

**யாழ். தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு ஈருருளிகள் மற்றும் உந்துருளிகள் என்பனவற்றில் செல்வதற்குப் படையினர் முற்றாக தடைவிதித்துள்ளனர்.**

வலிகாமம் வடக்கு இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயத்துள் இருக்கும் தெல்லிப்பழை வைத்திய சாலைக்குச் செல்லும் நோயாளர்கள் ஈருருளிகள் மற்றும் உந்துருளிகள் போன்ற இரு சக்கர வாகனங்களில் தனிப்பட்ட முறையில் பயணிப்பது பாதுகாப்பு வலயத்தில் நிலைகொண்டிருக்கும் படையினரது பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும் என்பதைக் காரணம் காட்டி கடந்த வாரம் முதல் மேற்படி நடைமுறையை அமுலுக்குக் கொண்டுவந்துள்ள இராணுவத்தினர் அரச பேருந்துகள் மூலம் மட்டுமே நோயாளர்கள் தெல்லிப் பழை வைத்தியசாலைக்குச் சென்று திரும்ப முடியும் என்றும் அறிவித்துள் ளனர்.

இந் நிலையில் மேற்படி வைத்தியசாலைக்கு செல்வோருக்காக சேவையில் ஈடுபடும் அரச பேருந்துகள் காலதாமதமாகவும் சீரற்ற முறையிலும் தமது சேவையை நடத்துவதால் நோயாளர்கள் பேருந்துதரிப்பு நிலையத்திலும் பாதுகாப்பு வலய நுழைவாயில் பகுதியிலும் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலையுள்ளது. இதனால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (33)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் தள்ளுவண்டிகள் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைகளுக்காக எடுத்து வரப்படும் நோயாளர்களை வைத்தியசாலைக்குள் எடுத்துச் செல்வதற்குப் போதியளவு நோயாளர் தள்ளுவண்டிகள் இல்லாதுள்ளன.

குறிப்பாக அவசர சிகிச்சைக்காக வெளியிடங்களிலிருந்து வாகனங்கள் மூலம் ஏற்றிவரப்படும் நோயாளர்களை உடனடியாக உரிய சிகிச்சைப் பிரிவுகளில் எடுத்துச் சென்று சேர்ப்பதற்குப் போதுமானளவு நோயாளர் தள்ளுவண்டிகள் யாழ்.போதனாவைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் இல்லாதுள்ளது.

இதனால் அவசர சிகிச்சைகளுக்காக அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் வரும் நேரங்களில் அவர்களை எடுத்துச்சென்று உரிய சிகிச்சைப் பிரிவுகளிலோ, விடுதிகளிலோ சேர்க்க முடியாது வைத்தியசாலை பணியாளர்கள் திணறுகின்றமையைக் காண முடிகிறது.

இதைவிட அவசர சிகிச்சைகளுக்காக வரும் நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவில் இருந்து ஏற்கனவே நோயாளர்களை எடுத்துச்சென்ற தள்ளுவண்டி மீண்டும் வெளிநோயாளர் பிரிவை வந்தடையும் வரை வெளிநோயாளர் பிரிவிலேயே காத்திருப்பதையும் காணமுடிகிறது.

இதனால் நோயாளர்களும் நோயாளர்களை அழைத்து வருவோரும் வைத்தியசாலைப் பணியாளர்களுடன் வாக்குவாதங்களிலும் முரண்பாடுகளிலும் ஈடுபடுகின்ற நிலையும் உள்ளது. (33)

## யாழ்.போதனா வைத்தியசாலையில் இரத்த வங்கியை விஸ்தரிக்க ஐ.ஓ.எம்.நிதியுதவி

யாழ்.போதனாவைத்தியசாலையின் இரத்த வங்கியின் செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்கு என புலம்பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச அமைப்பு(ஐ.ஓ.எம்.) உதவிகளை வழங்கியுள்ளது.

அந்த வகையில் புலம் பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச அமைப்பினர் யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கிக்கு என செல்லிடக்கணனி மற்றும் நிழல் பிரதி இயந்திரம் என்பனவற்றை கடந்த வாரம் வழங்கியுள்ளதாக யாழ்- போதனாவைத்தியசாலை இரத்த வங்கி அதிகாரி கூறினார்.

இவை போதனாவைத்தியசாலையின் இரத்தவங்கிப்பொறுப்பதிகாரி வைத்தியகலாநிதி சிவசங்கரிடம் வைத்தியசாலையில் வைத்து வைபவரீதியாக கையளிக்கப்பட்டன. (33)

# யாழ்.குடாநாட்டுப் பாடசாலைகளுக்கு பாடநூல் விநியோகம் முழுமையாக இடம் பெறவில்லை

**-அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் குற்றச்சாட்டு**

யாழ். குடாநாட்டுப் பாடசாலைகளுக்கான பாடநூல் விநியோகம் முழுமையாக இடம் பெறவில்லை என்று யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் குற்றஞ் சாட்டியுள்ளது.

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இது தொடர்பான குற்றச்சாட்டு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டுப்பாடசாலைகளில் 2005ஆம் ஆண்டுக்குரிய கல்வியாண்டுகளின் மூன்றாம் தவணை முடிவடைந்து 2006ஆம் ஆண்டுக்குரிய கல்வியாண்டுகள் ஆரம்பமாகவுள்ளன.

இந்நிலையில் 2005 ஆம் ஆண்டிலேயே விநியோகித்து முடிக்கப்படவேண்டியுள்ள மாணவர்களுக்கான பாடநூல்கள் இன்னமும் விநியோகித்து முடிக்கப்படவில்லை.

இவ்வாறு பாடநூல்கள் விநியோகிக்கப்படாதிருப்பதற்கு கல்வி அமைச்சினதும் அரசினதும் அசமந்தப்போக்குகளே காரணம் என்று யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளதுடன் இவ்வாறான தாமதங்களைப்போக்க அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் கோரியுள்ளது. (33)

## வலி.வடக்கு இடம் பெயர்ந்த மக்கள் தொடர்ச்சியான போராட்டம் நடத்த ஏற்பாடு

யாழ் வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தம்மைமீளக்குடியமர அனுமதிக்கக்கோரி தொடர்ச்சியான வெகுசனப் போராட்டங்களை நடத்தவுள்ளனர்.

வலிகாமம் வடக்கில் பொதுமக்களது வாழ்விடங்களை ஆக்கிரமித்துள்ள இராணுவம் வெளியேறித் தமது மீள்குடியமர்வுக்கும் இயல்பு வாழ்வுக்கும் வழிசமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி இப்போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன.இந்தப்போராட்டமானது தெல்லிப்பழையில் இருக்கின்ற வலிவடக்கு இராணுவ பாதுகாப்பு வலயத்தின் நுழைவாயில் பகுதியில் நடைபெறும் என்றும் வலிவடக்கு பாதுகாப்பு வலயத்தில் இருக்கும் பலாலி படைத்தளத்துக்கும் ஏனைய படைமுகாம்களுக்குமிடையான தரைவழி இராணுவ விநியோகமார்க்கங்களைத் துண்டித்து ஸ்தம்பிக்குமளவுக்கு இந்த போராட்டம் நடத்தப்படும் என்று வலி. வடக்கு இடம்பெயாந்தோர் நலன்புரிச்சங்கசமாசத் தலைவர் ரி-கணேஷ் கூறினார். (33)

# இரவு நேர வீதி மின்விளக்கு இன்மையால் வீதி விபத்து இடம்பெறுவதாக குற்றச்சாட்டு

யாழ். மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பல வீதிகள் இரவு நேர வீதி மின்விளக்குகள் பொருத்தப்படாது இருக்கின்றன.

மேற்படி பகுதிகளில் உள்ள வீதிகள் பலவற்றில் மின் விளக்குகள் பொருத்தப்படாததனால் இரவு நேர வழிப்பறி, வீதிவிபத்து என்பன நிகழ்கின்றன.

இதனால் பொதுமக்கள் எதிர் கொள்கின்ற அசௌகரியங்களைச் சுட்டிக்காட்டி யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட வீதிகளில் வீதி மின் விளக்குகளைப் பொருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கும்படி விடுக்கப்பட்டு வந்த கோரிக்கைகளுக்கு இணங்க மாநகரப்பிரதேச வீதிகள் அனைத்திலும் மின் விளக்குகளை பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்.அரச செயலகமும் மாநகர சபையும் உறுதியளித்திருந்தது.

எனினும் இவர்கள் உறுதியளித்த படி சகல வீதிகளிலும் மின் விளக்குகள் பொருத்தப்படவில்லை இதனால் வீதிகள் பலவும் இருள் மண்டிக்காணப்படுகிறது.

இது காரணமாக இரவுநேர வழிப்பறிக் கொள்ளைகளும், வீதி விபத்துக்களும் தொடர்ந்தும் இடம் பெறுகின்றன. (33)

# கடற்கரையோரப்பிரதேசங்களில் மரநடுகை; வலியுறுத்தி வடமராட்சி மக்கள் கோரிக்கை

யாழ்.வடமராட்சியில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கடற்கரையோரப் பிரதேசங்களில் மரநடுகைத்திட்டங்களை அமுல்படுத்த வேண்டும் என்று கடற்கரைப்பிரதேச வாழ்மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மக்கள் இது தொடர்பான தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் யாழ்மாவட்ட அரச அதிபர் கே.கணேஷிடம் கையளித்துள்ளனர்.

சுனாமி ஆழிப்பேரலையின் தாக்கத்தினால் வடமராட்சி வடக்கு மற்றும் வடமராட்சி கிழக்கு கடற்கரையோரங்களில் மண்ணரிப்பைத் தடுக்கும் வகையில் நடுகை பண்ணப்பட்டிருந்த சவுக்குமரம், தென்னை மரம் மற்றும் தாளை போன்ற கண்டல் தாவரங்கள் என்பன எல்லாம் அழிவடைந்து விட்டன. இந்நிலை யில் கடற்கரையோரப் பிரதேசங்களில் இதுவரை மரநடுகைத்திட்டங்கள் எதனையும் எவரும் அமுல் செய்யாத காரணத்தால் எதிர் காலத்தில் சுனாமி போன்ற கடலனர்த்தங்கள் நேரும் பொழுது பாரிய தாக்கங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதுடன். இதன் விளைவாக மண்ணரிப்பு ஏற்பட்டு கடல்நீர் ஊர்களுக்குள் புகுந்து விடக்கூடிய அபாயமும் உள்ளது என்பதையும் சுட்டிக்காட்டியே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (33)

# சிறப்புற நடைபெற்ற துணுக்காய் பிரதேச மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் பிரதேசத்திற்குட்பட்ட மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் காலை பத்து மணிக்கு மல்லாவி மத்திய கல்லூரி மண்டபத்தில் துணுக்காய் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் செ.புனிதன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முதன்மைச் சுடரினை துணுக்காய் பிரதேச செயலர் நா.நந்தகுமார் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக்கொடியை தமிழீழ தொழிற்பயிற்சிப் பொறுப்பாளர் நரேன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து மாவீரர்களின் பொதுக் கல்லறைக்கான ஈகச் சுடரினை மல்லாவி மத்தியகல்லூரி உப அதிபர் திருமதி. பு.பாலசுப்பிரமணியம் ஏற்றியதைத் தொடர்ந்து கல்லறைக்கான மலர்மாலையினை அரசியல்துறையைச் சேர்ந்த த.குயிலின்பன் அணிவித்தார். தொடர்ந்து மலர் வணக்கம், அகவணக்கம் என்பன இடம்பெற்றன. அரங்க நிகழ்வில் வரவேற்பு நடனத்தை மல்லாவி மத்திய கல்லூரி உயர்தர மாணவி செல்வி. ஆ.சத்தியகலா நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து நினைவுரைகளைத் துணுக்காய் பிரதேச செயலர் நா.நந்தகுமார், சோதியாபடையணியின் போராளியான செல்வி.மஞ்சரி, குயிலின்பன் ஆகியோர் நிகழ்த்த, சிறப்புரையை தூயவன் அரச அறிவியல் கல்லூரிப் பொறுப்பாளர் அ.பார்த்தீபன் ஆற்றினார். இந்நிகழ்வில் மல்லாவி மத்திய கல்லூரி மாணவர்களின் கலைநிகழ்வுகள் என்பன இடம் பெற்றன. அத்துடன் மாவீரர் பெற்றோர்களைக் கௌரவித்து நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன. இப்பரிசில்களைச் சோதியா படையணியின் தளபதிகளில் ஒருவரான செல்வி.வரதா வழங்கிக் கௌரவித்தார். நன்றியுரையை மாவீரர் செயற்பாட்டுக்குழுப் பொருளாளரும், துணுக்காய் பிரதேசசபையின் செயலாளருமாகிய மு.கிருஸ்ண நவரட்ணராஜா வழங்கினார். மேற்படி நிகழ்வில் பாண்டியன்குளம் துணுக்காய் வலய புனர்வாழ்வுக்கழகம், தமிழீழ நிர்வாக சேவையின் முல்லை. கிளைச் செயலகம், பாண்டியன்குளம் துணுக்காய்/அபிவிருத்திக்கழகம், மாறன் இல்லம் ஆகிய பொறுப்பாளர்கள், பணியாளர்கள், துறைசார்ந்த பொறுப்பாளர்கள், போராளிகள் எனப்பலரும் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர். (24)








(படங்கள்:- அனிரன்)

# தெளிவற்ற கொள்கைகளால் தடுமாறும் இந்தியா!

இந்திய வெளியுறவுக் கொள்கைகள் பெரும்பாலும் விருப்பப்படுவனவாக அமைவதில்லை என்பது மக்களின் அபிப்பிராயமாக இருந்தநிலை மாறியிருக்கின்றது. ஐக்கியமுற்போக்கு கூட்டணியரசு வெளியுறவுக் கொள்கைகளில் அனுகூலமாக இருப்பதாக ஆய்வுகள் கூறியிருக்கின்றன. ஆனால் முன்பு ஆட்சியிலிருந்த ஐக்கிய


புஷ்

முற்போக்கு கூட்டணியரசு இவ்வாறு செயற்படவில்லை என்றும் கூட கூறப்படும் நிலை எழுந்திருக்கின்றது.

இந்த வகையில் மூன்று நாட்கள் பயணமாக பிரதமர் மன்மோகன்சிங் ரஷ்யா பயணமாகி இருக்கிறார். ஏற்கனவே அமெரிக்காவுக்கும் சென்றுள்ளார் என்பதுடன் பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப்பையும் கூட சந்தித்திருக்கின்றார்


மன்மோகன்சிங்

என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில், ரஷ்யாவுடன் இந்தியா வெளியுறவில் நட்புடன் இணங்கிப் போகப் போவதாகக் கூறியிருக்கின்றது. நான்கு பிரதான விடயங்களில் இரு நாடுகளும் இணக்கம் காணவும், உடன்படிக்கை செய்யவும் விரும்புகின்றன என்பது வெளியுறவு அமைச்சின் தகவல்.

அந்த வகையில்;

* இராணுவ உடன்படிக்கைகள்

* 2010 இற்குள் இராணுவ தொழில் நுட்பத்தில் மேன்மை காண்பது.

* விண்வெளி தொடர்பான 2004 உடன்படிக்கையினை புதுப்பித்தல்

* பொருளாதார,வர்த்தக மேம்பாடு போன்ற விடயங்களையே இரு நாடுகளும் கலந்தாலோசித்து ஒப்புதல் செய்யவுள்ளன.

இந்தியா தனது பாதுகாப்பில் மிகுந்த அக்கறை கொள்கின்றது. அதற்காகவே ஓடி ஓடி நாடுகளுடன் ஒப்பந்தங்களை நாடுகின்றது. ஏனைய நாடுகளுடான இராணுவ தொழில்நுட்பத்தைத் தனது இராணுவத்திடம் புகுத்துவதால் தனது இராணுவ பலத்தை பலப்படுத்துவதில் அக்கறை கொள்கின்றது எனலாம்.

ஏனெனில் பாகிஸ்தானுடன் இந்தியாவின் உறவுகள் தொடர்வதாக இருந்தாலும் கூட அவை எப்போது முறியும் என்பதுதான் எதிர்பார்ப்புடன் இருக்கும் வினாவாகும். அதனால் தன்னை பலப்படுத்தியும் திடப்படுத்திக் கொள்ளவும் முனைப்பாக இருக்கின்றது இந்தியா. அதற்காகவே பிறநாட்டு இராணுவ தொழில் நுட்பங்களைப் பெறவும் அவற்றைத் தமதாக்கவும் ஆர்வமாக செயற்படுகின்றது.

இவற்றைவிடவும் கிணற்றுத்தவளையாகத், தாம் இருக்கக் கூடாது என்பதற்காக விண்வெளி ஆய்வுகளிலும் முதன்மைபெற வேண்டுமென்று அதிலும் ஒப்பந்தங்களை இந்தியா மேற்கொள்ளவுள்ளது.

இவற்றைவிடவும் இந்திய-ரஷ்ய உறவுகள் ஓரளவு பளபளப்பு குறைந்து காணப்படுவதாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கருதுகின்றார்போலும். அதனால்தான் தன்னுடன் வணிகக் குழுவையும் அழைத்துச் சென்றிருக்கின்றார் எனலாம்.

ஏனெனில்பொருளாதாரம், வர்த்தகம், வங்கி என்பவற்றில் இருநாட்டு உடன்படிக்கைகளும் ஏற்கனவே இருந்தபோதும் இப்போது அவை துடிப்பற்று இருப்பதால் அதற்குப் புத்துயிர் கொடுக்கவும் பிரதமரின் பயணம் உதவும் என்று எதிர்பார்க்கலாம்.

இதேவேளை, இருநாடுகளும், பாதுகாப்பு,பொருளாதாரம் ,வர்த்தகம்,வங்கி விண்வெளி என்பவற்றில் உறவுகளை இறுக்கிக் கொள்ளப்போவதாகக் கூறினாலும் கூட,பிரதமர் மன்மோகன் சிங்கின் ரஷ்யப் பயணம் வேறு ஒரு விடயத்தையும் கோடிட்டு காட்டியிருக்கின்றது எனலாம்.

அதாவது, ஈராக்,ஈரான் விவகாரம்


முஷாரப்

குறித்தும் பிரதமர் மன்மோகன்சிங், புட்டினுடன் கலந்தாலோசிக்கவுள்ளார் என்பதுதான் அது!

அந்த வகையில் இந்தியா ஈராக் விவ்காரத்தில் மூக்கை நுழைத்துக் கொண்டதனால் இரு அவைகளிலும் ஒரே வெட்டுப்பாடு குத்துப்பாடாக ஒரே ரகளைதான்! என்ன செய்து.... ஏது செய்வது என்று.... இந்தியாவுக்கு புரியாத புதிராகவே இருக்கின்றது.

ஏனெனில் அமெரிக்கா சென்ற பிரதமர் மன்மோகன்சிங், அமெரிக்காவின், குழையடிப்பினால் மயங்கிப்போய்விட்டார் எனக் குற்றம் சாட்டப்பட்டிகின்றார். சர்வதேச அணு சக்தி கூட்டத்தில் இந்தியா ஈரானுக்கு எதிராக வாக்களித்ததும் இதன் காரணமாகவே எனவும் கூறப்படுகின்றது.

இந்த விவகாரம் இந்திய மக்களவையில் பெரிய பூகம்பமான விவகாரங்களாகி விட்டது. நடந்து கொண்டிருக்கும் குளிர்கால கூட்டத் தொடரில் இடது சாரிகள் இதனை விவகாரமாக்காமல் விடப்போவதில்லை என்று கூறியே இருக்கின்றனர்.

அதனால் மத்தியரசு ஆடிப் போயிருக்கின்றது. ஈரான் விவகாரம் தனது நாட்டில் இவ்வளவு பெரிய அதிர்வுகளை ஏற்படுத்த போகின்றது என்பதை இந்தியப்பிரதமர் ஏனோ உணர்ந்திருக்கவில்லை என்றுதான் கூற வேண்டும்.

ஆனால் ஈரானுக்கு எதிரான போக்கை இந்தியா கடைப்பிடிப்பதில் இடது சாரிகள் ஒப்பவில்லை.யாரோ அணுவாயுதம் தயாரித்தால் நமக்கென்ன. நாமேன் தேவையில்லாது கருத்துக் கூற வேண்டும் என்பது இடதுசாரிகளின் கருத்து.

அதனால் இப்போது மத்தியரசு இரு தலைக்கொள்ளி எறும்பாகத் தவிப்பது தெளிவு. ஏனெனில் அமெரிக்காவுக்கு எதிராக எப்படி இனி செயற்படுவது. அதாவது அமெரிக்காவுக்கு சார்பாக இல்லாமல் இருப்பதென்பது வீண் தொல்லைகளை விலை கொடுத்து வாங்குவதற்கான முதற்படி என்று பிரதமர் மன்மோகன் சிங்கின் எண்ணமாக இருக்கலாம்.

ஏனெனில் உலகின் வல்லரசாக மிகவும் வலிமை பொருந்திய நாடாகத் தன்னை காட்டிக்கொள்ளும் போக்குடைய அமெரிக்கா தனக்குச் சலாம் போடாத நாடுகளை ஏதோ ஒரு விதத்தில் பழி தீர்க்க முற்படுவது வழமை.

அதற்காகவேதான், ஈரானுக்கு எதிராக அமெரிக்கா கை தூக்க வேண்டுமென்றவுடன், உடனே இந்தியாவும் கை தூக்கிவிட்டது.

இப்போது,எதிர்வரும் 24 ஆம் திகதி சர்வதேச அணு சக்திக்கூட்டம் நடைபெறவுள்ளது. இதில் மீண்டும் இரண்டாம் கட்டமாக வாக்களிப்பு நடைபெறவுள்ளது. முன்பு பங்கு பற்றிய நாடுகளே மீண்டும் வாக்களிக்கவுள்ளன.

எனவே இந்தியாவும் வாக்களிக்கவுள்ள நிலையில்; இடதுசாரிகளோ இரண்டாம் கூட்டத்தில் இந்தியா ஈரானுக்கு எதிராக வாக்களிக்கக் கூடாது என்று மிரட்டல் விடுத்திருக்கின்றது. இதனால்தான் இந்தியா ரஷ்யாவுடன் இது குறித்துப் பேச ரஷ்யாவுக்கு பறந்திருக்கின்றது.

ஏற்கனவே, ஈரானுடனான எரிவாயுத் திட்டம் குறித்து ஈரான் பாகிஸ்தானுடன் இந்தியா திருப்திகரமான முடிவை எட்டியிருக்கின்றது. இது ஏனோ அமெரிக்காவின் கழுகுக் கண்களுக்குப் பிடிக்கவில்லை.

உடனடியாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொண்டலிசாறைஸ் அவசர அவசரமாக இந்தியா வந்தார்.ஈரான் அணுவாயுதம் தயாரிப்பதாகவும், இந்தியா ஈரானுடன் உறவு கொள்வது தமக்குப் பிடிக்கவில்லையென்றும் ஓதி விட்டுச் சென்றார். வரும் அடுத்து பாகிஸதான் பறந்தார்.

இதே தாரக மந்திரத்தை ஓதிவிட்டுச் சென்றுள்ளார். இதுவரை காலமும் அமெரிக்காவின் பிடியில்தலையாட்டி பொம்மையாக இருந்த பாகிஸ்தான் இப்போதும் அப்படியே செய்வதாக அமெரிக்காவுக்கு வாக்களித்திருப்பதாகத் தகவல்.

எனவே ஈரானிலிருந்து இந்தியா வரவிருந்த எரிவாயு திட்டம் இனி என்னவாகும் என்று மணிசங்கர் ஐயர் ஓடுப்பட்டுத் திரிகின்றார் பாகிஸ்தான் மாறி ஈரான் மாறி காற்றாய் தள்ளாத வயதிலும் பறக்கின்றார். ஆனால் ஈரானுடன் இந்தியா உறவு வைப்பதை அமெரிக்கா ஏன் விரும்பவில்லை.....

இஸ்லாமிய நாடான ஈரானை தனது பிடிக்குள் கொண்டுவருவதற்காக ஈரானை தனிமைப்படுத்துவதாக தகவலகள் கூறுகின்றன. அதற்காகவேதான் இந்தியாவோ, பாகிஸ்தானோ ஈரானுடன் நட்புறவு கொள்வதற்கு முன்பு வெட்டிவிட துடிக்கின்றது.

அதற்காகவே தான் ஈரான் அணுவாயுதங்களைத்தயாரிப்பதாக கூறியிருக்கின்றது. இந்தியாவையும் ஈரானுக்கு எதிராக திருப்பி இருப்பதில் வெற்றிகண்டிருக்கின்றது. எனவே ஈரான் அணுவாயுதம் தயாரிப்பதாக இந்தியா வாக்களிப்பதனால் மீண்டும் ஈரானுடன் எப்படி எரிவாயுத் திட்டத்தை செயற்படுத்த முடியும்....?

ஆக.... எங்கே... சுண்டினால் எங்கே வலிக்கும் என்பதாக ஈரானுக்கு எதிராக இந்தியா கை தூக்குவதனால் ஈரானும்


புட்டின்

இந்தியாவும் மோதிக்கொள்ளுமே தவிர எரிவாயுத்திட்டமாவது....... நடைமுறைப்படுத்துவதாவது.... எல்லாமே அனலில்பட்ட மெழுகாய் உருகிப் போவதுதான் மிச்சமாக இருக்க முடியும் எனலாம்.

இதனால்தான் இந்திய மத்தியரசு இக்கட்டில் மாட்டிக் கொண்டு முழிக்கின்றது எனலாம். இந்தியரசு வெளியுறவு கொள்கையில் மேன்மையுறுவதாக ஆய்வுகள் கூறுகின்றது. ஆனால் அமெரிக்காவோ இந்திய வெளியுறவுக் கொள்கையில்


மணிசங்கர் ஐயர்

தலையிடாமல் இல்லை என்றுதான் கூற வேண்டியுள்ளது.

இவற்றையெல்லாம் சரிக்கட்டுவதற்காகக் கூட பிரதமர் மன்மோகன்சிங் புட்டினை சந்திக்க மூன்றுநாட்கள் பயணமாகியுள்ளார்போலும். ரஷ்யா, எத்தகைய ஆலோசனைகளை வழங்கவுள்ளது என்பதும்..... அதன்படி இந்தியா நடக்குமா....... என்பதும் எதிர்காலத்தில் தெரியவரும். முக்கியமாக இப்போது இந்தியா அமெரிக்காவுக்கு எதிரான வகையில் செயற்படுமா என்பதே முக்கிய வினாவாகும்.

அ.கலைவாணி




# தவறான கணிப்பு

சாதிக்குமா? சறுக்குமா? என்ற வினாவுக்கு விடை கிடைத்துவிட்டது. 18 ஆண்டுகள் காத்திருந்து ஆஷஸ் தொடரைக் கைப்பற்றிய இங்கிலாந்து அணி பாகிஸ்தான் மண்ணில் சறுக்கிவிட்டது.

இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாக இருந்த போதும் நினைத்ததை விட கைமீறிச் சென்று விட்டது என்பது தான் வித்தியாசமானது.

ஆஷஸ் வெற்றியுடன் தொடர் வெற்றிக்காக பாகிஸ்தான் மண்ணில் கால்பதித்த இங்கிலாந்து அணி பாகிஸ்தானை இலகுவாக வென்று வெற்றிப் பயணத்தை தொடரலாம் என்றே எண்ணியது.

இதன் சமிக்ஞையாக அணித்தலைவர் மைக்கல் வோகன் எவ்வகை சுழலந்து வீச்சாளர்களையும் எதிர் கொள்ள எமது வீரர்கள் தயாராகவே உள்ளனர் எனத் தெரிவித்திருந்தார்.இந்த நிலையில் இங்கிலாந்து அணி பாகிஸ்தானின் ஏ அணியுடனான போட்டியில் செயற்பட்டதா? என்பது அவர்களுக்கே வெளிச்சம்.

இதற்கும் மேலாக அவுஸ்திரேலியாவை சமாளி[illegible] விட்டோம். பாகிஸ்தான் எல்லாம் ஒரு அணியா என்ற எண்ணத்தில் இங்கிலாந்து இத்தொடாரை எதிர் கொண்டதா என்ற கேள்வியையும் எழுப்புகின்றது.

இதில் இருந்து ஒன்றை தெளிவாக உணர முடிகின்றது.

ஆசிய ஆடுகளங்களில் மேற்கத்தேய அணிகளால் ஆதிக்கம் செலுத்த முடியாது என்பதை. இங்கிலாந்து பொறுத்து தொடர்ச்சியாக ஆறு டெஸ்ட் போட்டிகளில் வெற்றி, சொந்த மண்ணில் ஆஷஸ் வெற்றி என்றெல்லாம் ஆகா ஓகோ என்ற நிலையிலேயே பாகிஸ்தானுக்கு வந்ததை மறக்க முடியாது.

இந்த நிலையில் அவமானகராமான தோல்வி ஒன்றை சந்திக்கின்றது என்றால் வியப்பானதுதானே.

இதற்கு விதிவிலக்காக அவுஸ்திரேலிய அணி திகழ்ந்தாலும் தடுமாறிய சந்தர்ப்பங்கள் பல உண்டு.





எதிர்கொண்ட தடுமாற்றம். தோல்வி என்பன அவ்வணி பாகிஸ்தான் மண்ணில் எதையும் சாதிக்கப் போவதில்லை என்ற எண்ணப்பாட்டை தோற்றுவித்தது.

ஆனாலும் அதனைப் பெரிதாக வெளிக்காட்டாத இங்கிலாந்து டெஸ்ட் போட்டியில் சாதித்துக் காட்டுவோம் என்று இறுமாந்திருந்தது என்றால் மிகையில்லை.

இந்த நிலையில் அக்தர் மட்டும் முழு உடல் தகுதியுடன் இருந்தால் இங்கிலாந்து அணியை 3-0 என்ற நிலையில் தோற்கடிக்கலாம் என பாகிஸ்தான் முன்னாள் வீரர்கள் கருத்து வெளியிட்டனர்.

அப்படியே நடந்தது என்றாலும் மறுப்பதற்கில்லை. அக்தரே வெற்றிக்குப் பெரும் பங்காற்றினார்.

ஆஷஸ் போட்டிக்கு அவுஸ்திரேலிய அணி இங்கிலாந்துக்குச் சென்ற போது அது கலந்து கொண்ட முதல் தர போட்டிகளில் தடுமாறியதுடன் தோல்வியையும் சந்தித்தது. அப்போதே அவுஸ்திரேலியாவின் வெற்றி என்பது கைமாறிச் செல்லும் ஒன்று என்பதை கிரிக்கெட் விமர்சகர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையே பாகிஸ்தானில் இங்கிலாந்து அணிக்கும் ஏற்பட்டது. இதனை இங்கிலாந்து அணி உணர்ந்து செயற்பட்டதா அன்றி தெரிந்தும் தெரியாததுபோல்

இந்த நிலையில் இங்கிலாந்து அணி தரவரிசையில் பின்னுக்கு தள்ளப்பட பாகிஸ்தான்அணி முன்னிலை பெற்றுள்ளது. இது இங்கிலாந்தின் கணிப்பு தவறாகி விட்டதையே காட்டுகின்றது.

எது எவ்வாறிருப்பினும் பூகம்பத்தால் சிதைந்து போன பாகிஸ்தான் ரசிகர்களுக்கு இன்சமாம் தலைமையிலான பாக். அணி தெம்பைக்கொடுத்துள்ளதுடன் இன்சமாம் தனது தலைமைத்துவத்தை அழுத்தம் திருத்தமாக நிரூபித்துள்ளார்.



இ.சியான்

சென்னையில் நடக்கும் கிரிக்கெட் போட்டிக்கும் மழைக்கும் அப்படி என்னதான் சம்பந்தமோ தெரியவில்லை. கடந்த மூன்று ஆண்டுகளாக சென்னை சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட இரண்டு ஒரு நாள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகள் மழையால் தடைப் பட்டன.

இவையெல்லாம் பார்க்கும் போது சென்னை கிரிக்கெட் ரசிகர்களை கொந்தளிக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் திட்டமிட்டே இந்திய கிரிக்கெட் சபை மழைக் காலத்தில் சென்னையில் கிரிக்கெட் போட்டிகளை ஏற்பாடு செய்கின்றதோ என்று நினைக்கத் தோன்றுகின்றது.



# தொடரும் துரதிஷ்டம்

ஏனெனில் கடந்தமூன்று ஆண்டுகளாக சென்னையில் நடப்பதாக அறிவிக்கப்பட்டிருந்த ஒரு போட்டி கூடமுழுமையாக நடைபெறவில்லை. அனைத்து ஆட்டங்களும் மழையால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

முதலாவது போட்டியாக 2003 ஆம் ஆண்டு இந்திய- நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டி பருவ மழையால் இரத்துச் செய்யப்பட்டது. மற்றையது 2004 ஆம் ஆண்டு இந்திய- அவுஸ்திரேலிய அணிகள் மோதிய டெஸ்ட் போட்டியின் கடைசிநாள் ஆட்டம் மழையால் இரத்துச் செய்யப்பட்டது. இதில் இந்தியா வெற்றி பெறும் நிலையில் இருந்ததை மறுக்க முடியாது. இதனைத் தொடர்ந்து அண்மையில் நடைபெற்ற தென்னாபிரிக்காவுடனான தொடரில் சென்னையில் நடைபெற இருந்த மூன்றாவது ஒரு நாள் போட்டி முற்றாக கைவிட்டப்பட்டது. இன்று நான்காவது போட்டியாக சிறிலங்கா-இந்திய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி காலம் கடந்து ஆரம்பமாகியுள்ளது.

12 ஆண்டுகளுக்கு முன்னர் கண்டி அஸ்கிரிய மைதானத்தில் இந்திய- சிறிலங்கா அணிகளுக்கிடையிலான டெஸ்ட்போட்டியே கைவிடப்பட்ட வரலாறாக இருந்தது. அங்கு 12 ஓவர் பந்து வீசப்பட்ட நிலையிலேயே கைவிடப்பட்டது. ஆனால் சென்னை டெஸ்ட் நான்காம் நாள் ஆட்டத்தின் இறுதிப் பருவத்தில் ஆரம்பமாகியுள்ளது.

இதனால் சென்னை கிரிக்கெட் ரசிகர்கள் மிகுந்த ஏமாற்றமடைந்துள்ளனர். கிரிக்கெட் பார்க்கும் ஆர்வத்தில் நுழைவுச் சீட்டு வாங்கியவர்கள் பணத்தை இழந்துள்ளனர். இது அவர்களுக்கு தொடர்கதையாவதா? இதற்கெல்லாம் காரணம் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கமும், இந்திய கிரிக்கெட்சபையும் தான். சென்னையில் வடகிழக்கு பருவ மழை ஒக்ரோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம்வரை பெய்யும் என்பது அனைவருக்கும் தெரியும். இந்தக் காலகட்டத்தில் இங்கு கிரிக்கெட் போட்டி நடத்த கிரிக்கெட்சபை முடிவு செய்வதும், அதை ஆட்சேபிக்காது தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் அப்படியே ஏற்றுக்கொள்வதும் தவறானதாகும். எனவே இதனால் பாதிக்கப்படுவது ரசிகர்களே. எனவே இனிமேலாவது மழை காலத்தில்போட்டி நடத்த ஏற்பாடு செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

அப்படி அவர்கள் செய்யாவிட்டால் இது தொடர்பாக நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கில் மழைக்காலத்தில் போட்டி நடத்தக் கூடாது என்று நல்ல தீர்ப்பை வழங்க வேண்டும் என்பதுதான் சென்னை கிரிக்கெட் ரசிகர்கள் அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

கிருஸ்ணா

# தாயகத்தில் தனித்துவம்

இந்திய அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்துவது என்பது சவாலான ஒன்று. அதுவும் பலம், பலவீனம் என்பதற்கு அப்பால் அவ்வணி சொந்த மண்ணில் எதிரணிகளுக்கு பாரிய சாவல்களை ஏற்படுத்தும் வகையிலேயே தங்கள் ஆட்டத்தை வெளிப்படுத்தி வருவதுண்டு.

அந்த வகையில் தென்னாபிரிக்க அணி உலகின் சிறந்த அணிகளில் ஒன்று என்பதையும், தரப்படுத்தலில் இரண்டாவது இடத்தை தக்கவைத்துக்கொள்ள முழுத் தகுதியும் இருக்கிறது என்பதையும் இந்தியாவில் அண்மையில் நடைபெற்று முடிந்த ஒரு நாள் போட்டித்



தொடரின் மூலம் ஸ்மித் நிரூபித்துள்ளதுடன் சக வீரர்கள் குறித்து பாராட்டையும் தெரிவித்திருக்கிறார்.

அண்மையில் நடைபெற்று முடிந்த இந்தியாவுடனான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடரில் தென்னாபிரிக்க அணி 2-2 என்ற கணக்கில் சமன் செய்தது.

இப்போட்டித் தொடர் குறித்து தென்னாபிரிக்க அணித் தலைவர் அணி வீரர்களை பாராட்டியுள்ளார். அணியின் தலைவராக இருக்கும் ஒருவர் அணி வீரர்கள் சிறப்பாக ஆடி வெற்றிகளைப் பெறவோ அன்றி கௌரவமான தோல்விகளுக்கு அணியை இட்டுச் செல்ல ஆற்றும் பங்களிப்புக்களையோ பாராட்டாமல் இருக்க முடியாது.

அவர் தனது பாராட்டில் "இந்தியாவுடனான ஒரு நாள் போட்டித் தொடர் வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தாலும் இதனை வெற்றிகரமான பயணமாகக் கொள்ள முடியும் என்றும், இதற்கு வீரர்களின் ஒட்டுமொத்த உழைப்பே காரணம்" எனத் தெரிவித்துள்ளார். ஸ்மித் தெரிவித்திருக்கும் கூற்றுக்கள் என்பது உண்மையானவையே.அதாவது, உலகின் தரப்படுத்தலில் இரண்டாம் நிலையில் இருந்த சிறிலங்கா அணி இந்திய அணியுடனான போட்டித் தொடரின் மூலம் அந்த அந்தஸ்தை இழந்ததுடன் தென்னாபிரிக்க அணிக்கு அந்த அந்தஸ்து ஏற்படவும் காரணமாகியது.

இந்த நிலையில் இந்திய அணிக்குச் சவாலாக ஸ்மித் தலைமையிலான இளம் வீரர்களைக் கொண்ட தென்னாபிரிக்க அணி ஈடுகொடுக்குமா என்ற கேள்வி கிரிக்கெட் வட்டாரத்தில் எழுந்திருந்தன.

அதாவது, இந்திய மண்ணில் எந்தப் போட்டியிலும் பங்கேற்காத வீரர்களைக் கொண்ட தென்னாபிரிக்க அணியால் இந்தியாவில் அந்த அணிக்கு சவாலாக ஆடுமா? அதுவும் கிப்ஸ், நிக்கி போயோ போன்ற அனுபவசாலிகள் இப்போட்டித் தொடரில் விளையாட முடியாத சூழ்நிலையில் தென்னாபிரிக்க அணியின் நிலை குறித்து கேள்வி எழவைப்பவையாகவே இருந்தது.

ஆனால், தென்னாபிரிக்க அணியின் தொடர்ச்சியாகப் பெற்றிருந்த வெற்றிகள் அணி வீரர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் ஒன்றாக அமைந்ததுடன் இந்திய அணியின் பலத்திற்கு ஈடுகொடுத்து விளையாட முடியும் என்ற மன உறுதியையும் இவ்வெற்றிகள் ஏற்படுத்தியிருந்தன.

அதாவது, தென்னாபிரிக்க அணியின் 19 ஒருநாள் போட்டிகளில் தொடர்ச்சியாக வெற்றி பெற்றமையானது இந்திய போட்டித் தொடர் குறித்த நம்பிக்கை அவ்வணி வீரர்களுக்கு ஏற்படக் காரணமாகி

எனவே, தென்னாபிரிக்க அணியால் ஒரு நாள் போட்டிகளில் அதிக வெற்றிகளைப் பெற்ற அணி என்ற சாதனையை முறியடிக்க முடியாமல் போனதே ஒழிய, உலகின் தலைசிறந்த அணிகளில் நாங்களும் ஒன்றுதான், உலக தரப்படுத்தலில் இரண்டாவது இடத்தை தக்கவைத்துக்கொள்ள தகுதியானவர்கள் என்பதை இந்திய அணியுடனான போட்டித் தொடரில் நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

எனவே, தென்னாபிரிக்க அணி குறித்த மதிப்பீடு ரசிகர்களுக்கு சற்று அதிகரிக்கப்பட்டதாகவே கருதமுடியும். இந்நிலையில் எதிர் வரும் அவுஸ்திரேலிய அணியுடனான போட்டித் தொடரில் அவ்வணிக்கு எதிராக அவர்கள் சிறப்பாக ஆடுவார்கள் என்று அதிகமாக எதிர்பார்க்கப் படுகின்றது.

தென்னாபிரிக்க அணி மீது தற்போது ரசிகர்களுக்கு ஏற்பட்டிருக்கும் நம்பிக்கையையும் உலகின் தலைசிறந்த அணி என்ற அந்தஸ்துக்கு தகுதியானவர்கள் என்பதையும் வெளிப்படுத்தும் ஒருகளமாக அவுஸ்திரேலிய அணியுடனான டெஸ்ட் தொடர் அமையாவுள்ள தென்பது கிரிக்கெட் பிரியர்களின் கணிப்பு.

பூ.சுபானந்

# பிரேசிலியரின் ஆதிக்கம்

உலக உதைபந்தாட்ட வரலாற்றில் பல சிறந்த வீரர்கள் வந்து போயுள்ளனர். அதற்கு அவர்களின் திறமை வெளிப்பாடே காரணமாகும். அந்த வகையில் 2005 ஆம் ஆண்டுக்கான உதைபந்தாட்டத்தில் சிறந்த வீரராக பிரேசில் நாட்டின் பர்சிலோனா. அணி வீரர் றொனால்டினோ தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் கடந்த 2004 ஆம் ஆண்டிலும் (பிபா) சர்வதேசகால்பந்தாட்ட சம்மேளனத்தினால் சிறந்த வீரர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

2005 ஆம் ஆண்டுக்கான சிறந்த வீரர் விருதை இவருக்கு வழங்கியது Ballon D' or கழகமாகும்.றொனால்டினோ 1999 ஆம் ஆண்டு பர்சிலோனா கழகத்தில் இணைந்து உதைபந்தாட்டத்தில் அறிமுகமானார். இவர் அப்போது நடைபெற்ற பிரிமியர் லீக் போட்டியில் பங்குபற்றி அணிக்கு தனது முதலாவது வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார். அன்று ஆரம்பித்த வெற்றியுடன் அண்மையில் நடைபெற்ற லீக் போட்டியொன்றில் பெற்ற வெற்றியும் சேர்த்து மொத்தம் 12 வெற்றிகளைப் பெற்றுக்கொடுத்துள்ளார்.

வரும் 2006 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ணப்போட்டிக்கு தகுதிகாண் போட்டியில் தனது தாய் நாடான பிரேசில்அணி தகுதிபெற காரணமாக இருந்தார்.

பார்சிலோன அணியின் அவ்வவ் ஆண்டுக்கான சிறந்த வீரர் விருதைப் பெறுபவர் வரிசையில்இவர் மூன்றாவது இடத்தைப்பெறுகிறார். 1997 ஆம் ஆண்டு றொனால்டோவும் 1999 ஆம் ஆண்டு றிவால்டோவும் இவ் விருதுகளைப்பெற்றள்ளனர்.

அண்மையில் ஐரோப்பாவில் சிறந்த வீரராக தெரிவான றொனால்டினோ தங்கப்பந்து விருதைப்பெற்றுள்ளார். இந்த விருதினைப்பெற்ற அவர் கருத்துத் தெரிவிக்கையில், பல உயர் வீரர்கள் புகழக்கூடிய சந்தர்ப்பம் ஒன்றின் கனவு நனவாகிவிட்டதாக குறிப்பிட்டார்.

2002 ஆம் ஆண்டு பிரேசில் அணி உலகக் கிண்ணத்தை கைப்பற்ற பெரும் பங்காற்றிய றொனால்டினோ அதன் அரையிறுதிப் போட்டியில் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். அதனால் வேதனையும் அடைந்தார்.

தற்போது பிரேசில்அணி ராபின்கோ, ரால்,றொனால்டோ, றொனால்டினோ என பலமான கூட்டணியுடன் 2006 உலகக் கிண்ணப்போட்டியில் பிரவேசிக்கின்றது. எனவே இம்முறையும் உலகக்கிண்ணத்தை பிரேசில் கைப்பற்றினாலும் ஆச்சரியம் இல்லை.



வடிவேல்

# கூட்டுறவுச் சங்கக்கிளை அமைக்க வேண்டுகை

(அலுவலக செய்தியாளர்)

கூட்டுறவுச்சங்கக் கிளையினை அமைத்துத் தருமாறு பூநகரி கறுக்காய்த்தீவு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் தெரிவித்ததாவது; கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பின் போது இப்பகுதிக்கென அமைக்கப்பட்டிருந்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளைக் கட்டடம் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது. ஆனால் இன்றைய நிலையில் எமது பகுதி மக்களுக்கு அக்கிளையின் தேவை மிக முக்கியமானதொன்றாகும். ஏனெனில் இங்கு வசிப்பவர்களில் 100 இற்கு மேற்பட்ட குடும்பம் விவசாயத்தை நம்பிவாழ்வதனால் நெற்செய்கை மற்றும் ஏனைய பயிர்களுக்கான பசளை போன்றவற்றை வாடியடிக்கோ அல்லது கிளிநொச்சிக்கோ சென்று கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. எமது கிராமத்திற்கு மட்டும் வருடமொன்றிற்கு மூவாயிரம் அந்தர் பசளை தேவைப்படும். இங்கு 2000 ஏக்கருக்கும் மேற்பட்ட பகுதி பயிரிடப்படுகின்றது. எனவே இவ்வாறான தேவைகளை இங்குள்ள மக்கள் நிவர்த்திசெய்ய பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளையினை மீண்டும் அமைத்து சேவையாற்ற முன்வருமாறு பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம். அதற்கான ஆக்கபூர்வமான பதில்கள் இதுவரை கிடைக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)


# அரசாங்க கேள்வி அறிவித்தல்

**மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனை,**
**முல்லைத்தீவு.**

## அழுக்குத் துணிகள் சலவை செய்தல்

01. முல்லைத்தீவு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட வைத்தியசாலைகளுக்கு அழுக்குத்துணிகள் சலவை செய்வதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. 2006 ஜனவரி முதல் டிசம்பர் 31 வரையான காலப்பகுதிக்கான இவ் வழங்கல் சேவைகளுக்காக இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் 2005.12.16 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிவரையும் முல்லைத்தீவு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனையில் வழங்கப்படும். ஒரு வைத்தியசாலைக்கு ஒரு வழங்கல் /சேவைக்கான ஒரு ஆவணத்தொகுதி மட்டுமே வழங்கப்படும்.

02. அரசாங்க ஒப்பந்தத்தை செய்யமுடியாதவாறு தடை செய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடை செய்யப்பட்ட நிறுவனங்களுக்கோ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.

03. விண்ணப்பிக்கத் தகுதியானோர் கீழ் கூறப்படும் தொகையைச் செலுத்தி கேள்வி ஆவணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 2005.12.19 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

04. வைப்புத் தொகைகளும் ஆவணங்களும்

| வைத்தியசாலை | கேள்வி வைப்புப் பணம் |
|---|---|
| மாவட்ட வைத்தியசாலை, முல்லைத்தீவு | 1000/= |
| சுற்றயல் கூறு, மல்லாவி | 750/= |
| கிராமிய வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு | 750/= |
| ம.ம.ம.மனை, முள்ளியவளை | 500/= |
| ம.ம.ம.மனை, நட்டாங்கண்டல் | 500/= |
| ம.ம.ம.மனை மாங்குளம் | 500/= |

05. கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்விச் சபையினால் 2005.12.19 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். இதில் விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ கேள்விகள் திறக்கும்போது சமுகமளிக்கலாம்.

06. கேள்விகள் தொடர்பான கேள்விச்சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

07. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் எமது பணிமனையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**வைத்திய கலாநிதி து.வி.ஜெயக்குலராஜா,**
**மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர்,**
**முல்லைத்தீவு.**

(சி-13425)



# அரசாங்க கேள்வி அறிவித்தல்

**மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனை,**
**முல்லைத்தீவு.**

## பால் தவிர்ந்த சமைத்த/ உலர் உணவு வழங்கல் - 2006

01. முல்லைத்தீவு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட வைத்தியசாலைகளுக்கு பால் தவிர்ந்தசமைத்த/ உலர் உணவு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. 2006ஜனவரி முதல் டிசம்பர் 31 வரையான காலப்பகுதிக்கான இவ் வழங்கல் சேவைகளுக்காக இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் 2005.12.16 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிவரையும் முல்லைத்தீவு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனையில் வழங்கப்படும். ஒரு வைத்தியசாலைக்கு ஒரு வழங்கல் /சேவைக்கான ஒரு ஆவணத்தொகுதி மட்டுமே வழங்கப்படும்.

02. அரசாங்க ஒப்பந்தத்தை செய்யமுடியாதவாறு தடை செய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடை செய்யப்பட்ட நிறுவனங்களுக்கோ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.

03. விண்ணப்பிக்கத் தகுதியானோர் கீழ் கூறப்படும் தொகையைச் செலுத்துவதுடன் பெறுமதி ஆவணத்தை (Worth Certificate) எனது பணிமனையில் சமர்ப்பித்து கேள்வி ஆவணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 2005.12.19 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

04. வைப்புத் தொகைகளும் ஆவணங்களும்

அ. உலர் உணவு வழங்கல்

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை | பெறுமதி ஆவணம் (worth Certificate) |
|---|---|---|---|
| சுற்றயல் கூறு, மல்லாவி | 300/= | 35,000/= | 75,000/= |
| கிராமிய வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு | 250/= | 25,000/= | 75,000/= |

ஆ. பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை | பெறுமதி ஆவணம் (worth Certificate) |
|---|---|---|---|
| மாவட்ட வைத்தியசாலை முல்லைத்தீவு | 350/= | 40,000/= | 75,000/= |
| ம.ம.ம.மனை, முள்ளியவளை | 200/= | 20,000/= | 25,000/= |
| ம.ம.ம.மனை, நட்டாங்கண்டல் | 200/= | 20,000/= | 25,000/= |
| ம.ம.ம.மனை, மாங்குளம் | 200/= | 20,000/= | 25,000/= |

இ. ஆவணங்கள்.

01. 01.12.2005 ஆம் திகதிக்குப் பின் பிரதேச செயலாளரிடமிருந்து பெறப்பட்ட தமது சொத்துக்களின் பெறுமதியை உறுதிப்படுத்தும் சான்றுக்கடிதம் (பி.செ.எம்.201 படிவம்) .

02. கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்விச் சபையினால் 2005.12.19 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள திறக்கப்படும். இதில் விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ கேள்விகள் திறக்கும்போது சமுகமளிக்கலாம்.

03. கேள்விகள் தொடர்பான கேள்விச்சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

04. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் எமது பணிமனையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**வைத்திய கலாநிதி து.வி.ஜெயக்குலராஜா,**
**மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர்,**
**முல்லைத்தீவு.**

(சி-13424)

# மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு

## வடக்கு கிழக்கு மாகாண சபை

# வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டம் (நீகோட்)

## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

# வெற்றிடங்கள்

வடக்குகிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி மாவட்ட காரியாலயங்களில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொது நிபந்தனைகள் :-**

நியமனங்கள் திருப்திகரமான சேவை அடிப்படையில் வருடாந்தம் புதுப்பிக்கப்படக்கூடிய ஒப்பந்த அடிப்படையிலானதாகும். அவ்வொப்பந்தம் திருப்தியடிப்படையில் மேலும் நீடிக்கப்படும்.

**வயதெல்லை :-**

நேர்முகப் பரீட்சையின் போது 55 வயதிற்கு குறைந்த விண்ணப்பதாரிகள் இல்லாத சந்தர்ப்பங்களில் மட்டும் 55 வயதிற்கு மேற்பட்டவர்கள் கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்படுவர்.

**விண்ணப்பிக்கும் முறை :-**

விண்ணப்பதாரிகள் அவர்களது கல்வித்தகைமை, தொழில்சார் தகைமைகள், பிறந்த திகதி, முன்னைய தொழில் விபரங்கள், முன்னைய அனுபவம், இரண்டு சான்றுபகர்வோர்களின் பெயர்கள், முகவரிகள், சுய தரவுகள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகள் உட்பட விண்ணப்பத்தினை அவர்களாகத் தயாரிக்க வேண்டும் விண்ணப்பம் பதிவுத்தபால் மூலம் 14.12.2005 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் திட்டப் பணிப்பாளர், வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம்(NECORD) 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை என்ற முகவரியில் கிடைக்க வேண்டும். அரச திணைக்களம் / அரச கூட்டுத்தாபனங்கள் / சபைகள் என்பவற்றில் சேவையிலிருப்போர் அவர்களது நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை :-**

தகைமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட குறுகிய அட்டவணையிலிருந்து நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

**சம்பளம் :-**

அரச சேவையில் இப்பதவிக்குரித்தான சம்பளத்துடன் விண்ணப்பதாரியின் தகைமைகளுக்கும் அனுபவத்திற்கும் அமைவாக 2000.12.26 ஆம் திகதி இல 10 முகாமைத்துவ சுற்று நிருபத்தின் பிரமாணம் 5இற்கு அமைவாக அப்பதவிக்கான சம்பளத்தின் 50% மேற்படாத படி ஒன்று வழங்கப்படும்

## கணக்காளர் பதவி II/I (03 பதவி வெற்றிடங்கள் யாழ்ப்பாணம்,கிளிநொச்சி, வவுனியா)

**கடமைகளும் பொறுப்புகளும்:-**

நிதி முகாமைத்துவத்தை ஸ்தாபிப்பதும் பராமரிப்பதும் உள்ளக நிதி கட்டுப்பாடு திட்டமிடுதல், வரவு செலவு திட்டத்தை தயாரித்தல்,கணக்குகளை சரியாக அறிக்கை செய்தலும் கணக்காய்வு செய்தலும் இவைகளைச் சரிவரச் செய்வதற்கேதுவாக தேவையான புத்தகங்களைத் தயாரிப்பதும் பராமரிப்பதும்.

**தேவையான தகைமையும் அனுபவமும் :-**

- ஐந்து வருட அனுபவத்துடன் அரசாங்க கணக்காளர் சேவையில் உரிமத்தவர் அல்லது அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர் சேவையில் உரிமத்தவராக இருத்தல் வேண்டும். அத்துடன்
- இலங்கை அல்லது ஐக்கிய இராச்சிய பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் நடுநிலை பரீட்சை அல்லது உரிமத்தவர் பரீட்சை அல்லது
- ஐக்கிய இராச்சிய பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் பகுதி 1, பகுதி 2 இல் சித்தி அல்லது
- ஐக்கிய இராச்சியத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பகுதி 1, பகுதி 2 இல் சித்தி அல்லது
- இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்லூரியின் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமாவில் சித்தி அல்லது.
- இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்லூரியின் உயர் தேசிய வர்த்தக டிப்ளோமாவில் சித்தி அல்லது
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் கணக்கியல் அல்லது பொருளியல் பாடத்தில் பட்டதாரி அல்லது
- ஐக்கிய இராச்சிய செயலாளர்களினதும் நிர்வாகிகளினதும் பட்டய நிறுவனத்தின் இறுதி பரீட்சையில் சித்தி

த.லங்காநேசன்,
திட்டப்பணிப்பாளர்,
நீகோட் திட்ட காரியாலயம்,
55,கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை.

(சி.13484)

# இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் வெற்றி பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சமர்ப்பணம்


-அக்தர்-


இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் போட்டியை இரண்டுக்கு பூஜ்ஜியம் என்ற கணக்கில் பெற்ற வெற்றியும் அப்போது தான் பெற்ற 17 விக்கெட்டுக்களும் கடந்த ஒக்ரோபர் மாதம் தமது மண்ணில் ஏற்பட்ட பூகம்ப அனர்த்தத்தில் பலியானவர்களுக்கு சமர்ப்பணம் என பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளரான சொஹைப் அக்தர் தெரிவித்துள்ளார்.

தாம் இந்தப் போட்டியை ஆரம்பிக்கும் போது பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் பெரும் மன அழுத்தத்துடன் இருந்ததாகவும் இதனால் இந்தத் தொடரை வென்று பாதிக்கப்பட்டவர்களை மகிழ்விக்க ஏதாவது செய்ய வேண்டும் என எண்ணியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பூகம்பத்தில் 80 ஆயிரம் பேர் பலியானதுடன் மூன்று இலட்சம் பேர் இடம்பெயர்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த பத்து மாதங்களாக அணியில் இருந்து நீக்கப்பட்டிருந்த அக்தர் இத் தொடரில் திறமையை வெளிக்காட்டினார். அத்துடன் இங்கிலாந்து அணியுடனான ஒரு நாள் தொடர் அணியிலும் இடம்பிடிக்கக் காத்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

# உலக டெஸ்ட் தர வரிசையில் முன்னேற மேலும் உழைக்க வேண்டும்


மைக்கல் வோகன்

தனது அணி உலக டெஸ்ட் தரவரிசையில் முதலாவது இடத்தைப் பெற இன்னும் வெகு தூரத்தில் இருப்பதாக இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல் வோகன் தெரிவித்துள்ளார்.

ஆஷஸ் வெற்றியாளரான மைக்கல் வோகன் மேலும் தெரிவிக்கையில், தனது அணி நிறைய கற்றுக் கொள்ள வேண்டியிருப்பதாகவும் தனது கனவு நிறைவேற வேண்டுமாயின் மேலும் முன்னேற வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுடனான டெஸ்ட் தொடரை இழந்த போதிலும் தனது அணி இன்னும் தரமற்ற அணியாகக்கருத முடியாது எனக் குறிப்பிட்ட அவர் மேலும் முன்னேற்றம் காண வேண்டிய உண்மையை உணர்ந்திருப்பதாகவும் இரண்டரை வருடங்களில் இவ்வாறான ஒரு தொடரை இழக்கவில்லையெனவும் தெரிவித்தார். வரும் மார்ச்சில் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருப்பதாகவும் பாகிஸ்தானுடனான போட்டியில் விட்ட தவறுகளை திருத்திக் கொள்வதாகவும் வோகன் தெரிவித்துள்ளதுடன் ஒருநாள் தொடரில் கவனம் எடுத்து அணி விளையாடும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# அக்தர், கனேரியாவிடம் தலைவணங்கும் இன்சமாம்



இங்கிலாந்து அணிக்கு எதிரான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் தனது அணியின் பந்து வீச்சாளர்களான அக்தர் மற்றும் கனேரியாவின் உழைப்பிற்கு தான் தலைவணங்குவதாக இன்சமாம் உல் ஹக் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணி மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் 100 ஓட்டங்கள் மற்றும் ஒரு இனிங்சால் வெற்றி பெற்றது. இப்போட்டியில் அக்தர் சிறப்பாக பந்து வீசி ஐந்து விக்கெட்டுக்களையும் கனேரியா நான்கு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதன் மூலம் பாகிஸ்தான் 2-0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது ஆஷஸ் கிண்ணம் கைப்பற்றிய உற்சாகத்துடன் பாகிஸ்தான் வந்த இங்கிலாந்து அணியினருக்கு அதிர்ச்சியை கொடுத்துள்ளார் இன்சமாம்.

இத் தொடரில் சிறந்த தலைமைத்துவத்தை வெளிப்படுத்திய அவர் இங்கிலாந்து பந்து வீச்சாளர்களுக்கு நல்ல பாடம் புகட்டினார். இத் தொடரில் விளையாடிய ஐந்து இனிங்சிலும் இன்சமாம் மூன்று சதங்கள் இரண்டு அரைச்சதம் உட்பட 431 ஓட்டங்களைக் குவித்தார். இதில் இரண்டு சதங்கள் ஒரே போட்டியில் அடுத்தடுத்து பெறப்பட்டது. இத் தொடரில் அவரின் சராசரி 107.75 ஆகும்.

தனது அணி பந்துவீச்சாளர் பற்றி குறிப்பிட்ட இன்சமாம் அக்தரும், கனேரியாவும் இங்கிலாந்தை திணறடித்து விட்டனர் என்றார்.

அக்தர் தனது பந்து வீச்சு பற்றி குறிப்பிடு கையில்;

நான் இடையில் மத்திம வேகப்பந்து வீச்சை மேற்கொண்டேன். இது தான் வெற்றியின் இரகசியம். ஆனாலும் அளவு குறைந்த பந்துகளை வீசி இங்கிலாந்து அணியை திணறடிக்கவும் தவறவில்லை.

மேலும் மணிக்கு 95 மைல் வேகத்தில் என்னிடம் இருந்து பந்தை எதிர்பார்த்தனர் இங்கிலாந்து வீரர்கள் ஆனால் நான் சாதுரியமாக வேகம் குறைந்த பந்துகளை வீசினேன் இதனால் தான் மைக்கல் வோனை வீழ்த்த முடிந்தது என்கிறார்.

# உள்ளூர்ப் போட்டியில் சதமடித்தார் சனத்




இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இலங் கை அணியி லிருந்து நீக்கப்பட்ட அதிரடித் துடுப்பாட்ட வீரர் சனத் ஜெயசூரிய சதமடித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்று வரும் மட்டுப்படுத்தப்பட்ட கழகங்களுக்கிடையிலான போட்டியில் 121 பந்துகளை எதிர்கொண்டு 106 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இரண்டு ஆறு ஓட்டங்களையும், எட்டு நான்கு ஓட்டங்கள் அடங்கலாக ஆட்டமிழக்காது மேற்படி ஓட்டத்தைப் பெற்றார்

டெஸ்ட் அணியில் இடம் கிடைக்காத மற்றுமொரு வீரரான ரசல்ஆனல்ட் ஆட்டமிழக்காது 67 ஓட்டங்களைப் பெற்றார்.

# ஒரு மாதத்தில் மூன்று தடவை சிவப்பு அட்டை காட்டப்பட்ட பெக்காம்



கடந்த இரு மாதங்களில் மூன்றாம் முறையாக இங்கிலாந்து உதைப்பந்தாட்ட அணித் தலைவர் டேவிட் பெக்காம் சிவப்பு அட்டை காட்டப்பட்டு போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

கடந்த சனியன்று கெட்டேப்றியல் மட்றிட் அணிகளுக் கிடையிலான "ஸ்பெயின்லீக்" போட்டியின் போது இரண்டாவது பாதி ஆட்டத்தின் 11ஆவது நிமிடத்தில் எதிரணியினரோடு சண்டையில் ஈடுபட்டதால் இவருக்கு சிவப்பு அட்டை காட்டி வெளியேற்றப்பட்டார்.இத்துடன் அவர் ஏழாவது தடவையாக வெளியேற்றப் பட்டுள்ளார்.

கடந்த ஒக்ரோபரில் நடைபெற்ற ஆஸ்திரியாவுடனான தகுதிகாண் போட்டியின் போதும் அதன்பின்னர் இரு வாரங்களில் நடைபெற்ற போட்டியின் போதும் அவர் இவ்வாறான தடைவிதிப்புக்கு உள்ளானார்.

# பிரீமியர் லீக் கால்பந்து போட்டி ஆர்ஷனலை தோற்கடித்தது செல்சியா



லண்டனின் பொர்டன் அரங்கில் கடந்த சனியன்று நடைபெற்ற பிரிமியர் லீக் கால்பந்தாட்டப் போட்டியில் செல்சியா அணி ஆர்ஷனல் அணியை இரண்டுக்கு பூஜ்ஜியம் என்ற கணக்கில் வென்றுள்ளது. இதன் காரணமாக தரவரிசையில் ஆர்ஷனல் அணி 14 புள்ளிகளையிழந்துள்ளது.

நேற்றைய ஆட்டத்தில் செல்சிய வீரர் ஜோன் டெறி ஒரு வருடத்துக்குப் பின்னர் ஒரு கோலை அடித்தார். ஒல்ட்ரப்பார்ட்டில் நடந்த இன்னும் ஒரு போட்டியில் யுனைட்டட் மஞ்செஸ்ரர் அணி கோர்ட்ஸ்மவுத் அணியை மூன்றுக்குப் பூஜ்ஜியம் என்ற ரீதியில் வென்றுள்ளது. இந்த வெற்றி கிடைக்கும் நேரம் அவ்வணியின் முன்னாள் நட்சத்திர வீரர் ஜோர்ஜ் பெஸ்ட்டின் இறுதிக் கிரியை நடைபெற்றது சிறப்பம்சமாகும்.

இந்த வகையில் செல்சியா 40 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும், மஞ்செஸ்ரர் 30 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் விகன் அணியை வென்ற லிவர்பூல் அணி 27 புள்ளிகள் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

# மூன்றாவது டெஸ்ட் போட்டி காண்பூரில் இருந்து அகமதாபாத்திற்கு

இந்தியா- சிறிலங்கா அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி கான்பூரில் இருந்து அகமதாபாத் மைதனத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. கான்பூரில் இன்னமும் திருத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இந்தப் போட்டி அகமதாபாத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. இலங்கை அணியை பொறுத்து இது ஓரளவிற்கு அதிஷ்டமான மைதானமாகக் காணப்படுகின்றது. அண்மையில் நடைபெற்ற ஒருநாள் போட்டியில் 6-1 என்ற தோல்வியிலும் கூட வெற்றிபெற்ற ஒரேயொரு மைதானம் அகமதாபாத் என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல் இலங்கை அணி 1964 ஆம் ஆண்டு உத்தியோக பற்றற்ற போட்டி ஒன்றில் இந்திய அணியை இந்த மைதானத்திலேயே வெற்றிபெற்றது.

இது மட்டுமல்லாமல் இலங்கை அணி இந்திய மண்ணில் எந்தவொரு டெஸ்ட் போட்டியிலும் வெற்றி பெறாத நிலையில் அகமதாபாத்தில் வைத்து அந்த சரித்திரபூர்வமான டெஸ்ட் வெற்றியை பெற்றுக்கொள்ளுமா என்ற கேள்வி எழும்பியுள்ளது.

# இங்கிலாந்தின் கோரிக்கைக்கு செவிசாய்த்தது இந்திய கிரிக்கெட் சபை

அடுத்த வருடம் இந்தியாவுக்கு சுற்றுலாவை மேற்கொண்டு மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் ஏழு ஒரு நாள் போட்டிகளிலும் கலந்து கொள்ளவிருக்கும் இங்கிலாந்து கிரிக்கெட் அணி ஒரு நாள் போட்டிகள் நடைபெறும். குறைந்த வசதியுள்ள மைதானங்களைத் தவிர்த்து வேறு மைதானங்களில் போட்டிகளை நடத்தவேண்டும் என கோரியதற்கிணங்க இரண்டு மைதானங்களை மாற்றுவதற்கு இந்திய கிரிக்கெட் சபை இணங்கியுள்ளது.

இதன்படி கட்டாக்கிலும் விசாகபட்டணத்திலும் நடைபெறவிருக்கும் ஒரு நாள் போட்டிகளை டில்லியிலும், மொகாலியிலும் நடத்துவதுதென முடிவு செய்து அதனை இங்கிலாந்து கிரிக்கெட் சபைக்கு அறிவித்துள்ளது.

எனினும் இந்தூர், கோவா, கொச்சி, குவஹாட்டி ஆகிய இடங்களில் நடைபெறும் போட்டியில் மாற்றமிருக்காது என்றும் பாரிதாபாத் ஆட்டம் வடமாநில ஹரியானாவின் நகரம் ஒன்றில் நடத்துவது என்றும் அறிவித்துள்ளது.

அதைவிட மும்பாய், மொகாலி, அகமதாபாத் ஆகிய இடங்களில் டெஸ்ட் போட்டிகள் நடைபெறும். எனினும் சிறிலங்காவுடனான இறுதி டெஸ்ட் போட்டி இம்மாதம் 18ஆம் திகதி அகமதாபாத்தில் நடைபெறுமாயின் இங்கிலாந்துடனான அகமதாபாத் போட்டி வேறு இடத்துக்கு மாற்றப்படும் என்றும் இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




# சென்னை டெஸ்ட் நேற்று ஆரம்பம்




மழையால் தடைப்படுமோ என எதிர்பார்க்கப்பட்ட சென்னை டெஸ்ட் போட்டி நேற்றுப் பிற்பகல் ஆரம்பமானது.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள சிறிலங்கா அணிக்கும் இந்தியா அணிக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி கடந்த இரண்டாம் திகதி ஆரம்பமானது. மழை காரணமாக கடந்த மூன்று நாட்களும் ஆட்டம் கைவிடப்பட்ட நிலையில் நேற்றைய நான்காம் நாளான ஆட்டம் பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடும் இந்திய அணி நேற்றைய ஆட்ட நேரம் முடியும்போது இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான கௌதம் கம்பீர் ஓட்டம் பெறாமலும், வீரேந்திர சேவாக் 36 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது அணித் தலைவர் ராகுல் ராவிட் 30 ஓட்டங்களுடனும், சச்சின் டெண்டுல்கர் 11 ஓட்டங்களுடனும் ஆடுகளத்தில் உள்ளனர். பந்து வீச்சில் சமிந்த வாஸ் வீழ்த்தப்பட்ட இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார். இன்று போட்டியின் இறுதி நாளாகும்.

## சிந்தனைக்கு



விடுதலையை வேண்டி நிற்கும் ஒரு தேசிய சமுதாயத்தின் உறுதிப் பாட்டை, எந்தவொரு சக்தியாலும் அழித்து விட முடியாது.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 06.12.2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## பொறுப்பு தமிழர் தரப்பல்ல!

யாழ். கோண்டாவில் பகுதியில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதல் சம்பவம் யுத்த நிறுத்த உடன்பாட்டின் பின்னான ஒரு மோசமான தாக்குதல் சம்பவம் என்பதில் சந்தேகமில்லை. ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு, நால்வரை காயப்படுத்தியதுமாக இச் சம்பவம் உள்ளது.

ஆனால் இவ் யுத்த நிறுத்த காலத்தில் நிகழ்ந்த ஒரே ஒரு மோசமான சம்பவம் அல்ல இது. விடுதலைப்புலிகளின் வணிகக்கப்பல்கள் மீதும் அரசியல்துறைப்போராளிகள் மீதும் பல தாக்குதல்களை சிறிலங்கா ஆயுதப்படையினர் நடத்தியதுண்டு. இதனால், பல போராளிகள் கொல்லப்பட்டும், கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்ட சம்பவங்களும் கூட இடம்பெற்றதுண்டு.

ஆகையினால், யுத்த நிறுத்த காலத்தில் நிகழ்ந்த முதலாவது மோசமான சம்பவம் இதுவல்ல.ஆயினும் இத்தாக்குதல் சம்பவத்திற்கு முக்கியமானதொரு பங்குண்டு என்பது மறுப்பதற்கு இல்லை. அதாவது இன்றைய அரசியல்– இராணுவச் சூழ் நிலையில் முக்கியத்துவம் மிக்கதொன்றே. குறிப்பாக, புதிய சனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பதவி ஏற்ற பின்னர் நிகழ்ந்த முக்கிய சம்பவம் ஆகும். இச்சம்பவம் சிலவேளை யுத்த நிறுத்த உடன்பாட்டின் எதிர்காலத்தையே தீர்மானிக்கும் அளவில் முக்கியத்துவம் பெற்றதாக அமையக்கூடும்.

அண்மைக்காலத்தில் சமாதானப் பேச்சுவார்த்தை,யுத்த நிறுத்த உடன்பாடு என்பனவற்றின் எதிர்காலம் குறித்து பலமான கேள்வி எழாமல் இல்லை. ஏனெனில் ஒரு புறத்தில் வன்முறைகள் அதிகரித்துக்கொண்டு போகையில் இன்னொரு புறத்தில் அவற்றைக் கட்டுப்படுத்த முடியாத கையறு நிலையில் போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவும் உள்ளது.

யாழ்.குடா நாட்டில் இறுதியாக நீர்வேலியில் நடந்த தாக்குதல்–வன்முறை–சிறிலங்கா இராணுவத்தினரால் திட்டமிட்டே மேற்கொள்ளப்பட்டது என்பது வெளிப்படையானது. இரு அப்பாவித்தமிழ் இளைஞர்கள் வேண்டுமென்றே சிறிலங்கா இராணுவத் தரப்பினால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பின் இந் நடவடிக்கையானது காழ்ப் புணர்வு காரணமாக மேற்கொள்ளப்பட்டதொன்று என்பதே பொதுப்படையான அபிப்பிராயமாகும். அதாவது கடந்த மாவீரர் நாள், அதற்கு முன்னதாக பொங்கு தமிழ் எழுச்சிகள் போன்றவற்றால் தமிழ் மக்கள் மீது சினமுற்றிருந்த இராணுவத்தரப்பினரே இப்படுகொலையை நிகழ்த்தியுள்ளனர்.

ஆனால், இத்தகையதொரு தாக்குதல் நிகழும் பட்சத்தில் அதன் எதிர் விளைவுகள் குறித்து சிறிலங்கா ஆயுதப்படைத் தரப்போ அன்றி அரசாங்கத்தரப்போ சரியான மதிப்பீடு கொண்டிருக்கவில்லை. அதாவது தற்போதைய அரசியல் யதார்த்தமானது சிறிய வன்முறைச் சம்பவங்கள் கூட பாரிய வன்முறைச் சம்பவங்களாக வெடிப்பதற்கான சூழ்நிலை இருந்ததை அவர்கள் கவனத்தில் கொள்ளவில்லை.

அதாவது தமிழ் மக்கள் சிறிலங்கா ஆட்சியாளர்கள் மீது பெரும் அதிருப்தி கொண்டுள்ளதோடு உணர்ச்சிக்கொதிப்புடன் கூடிய, காலப் பகுதியாகவும் இது உள்ளது. இந்நிலையில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஒடுக்குமுறை மற்றும் வன்முறைகளுக்கு எதிராகத் தமிழ் மக்கள் கிளர்ந்தெழுவதும், பதிலடி கொடுக்க முனைவதும் இயற்கையானதே.

கோண்டாவிலில் இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலும் இத்தகையதொன்றே. இத்தாக்குதல்களை நடத்தியதாக விடுதலைப்புலிகள் மீது சிறிலங்கா புலானாய்வுத் துறையும், இராணுவத்தரப்பும் குற்றம் சாட்டினும் அதில் அர்த்தம் எதுவுமில்லை.

அது மட்டுமன்றி கோண்டாவிலில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலானது ஒரு பதிலடி நடவடிக்கை என இராணுவப்பேச்சாளர் குறிப்பிட்டுள்ளமையானது இவ் வன்முறைகளை இராணுவத் தரப்பே ஆரம்பித்து வைத்தது என்பதை அவர்களே உறுதி செய்வதாகவும் உள்ளது. அதாவது பதிலடி என்பது நடத்தப்பட்டதொன்றிற்காக கிடைக்கப்பெறும் ஒன்றே ஆகும்.

ஆகையினால் கோண்டாவிலில் நடந்த சம்பவம் தொடர்பாகப் புலிகள்மீது அரசாங்கம் குற்றம் சாட்டுவதில் அர்த்தமில்லை. அதாவது தாக்குதல்களை யார் செய்தது என்பது அறியப்படாத நிலையில் தாக்குதல் பதிலடி நடவடிக்கை என இராணுவத்தரப்பே கூறுவதனால் புலிகள் மீது குற்றம் சாட்டுவது அர்த்தமற்றதொன்று. அதாவது, பதிலடிகள் என்பதே பாதிக்கப்பட்டவர்களால் கொடுக்கப்படுவதே.

இதேவேளை யாழ்.குடாநாட்டில் நேற்றும் நேற்று முன்தினமும் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு ஒருபுறத்தில் சிறிலங்கா அரசின் தவறான நடவடிக்கைகளும் இன்னொரு புறத்தில் மக்களின் உணர்ச்சிக் கொந்தளிப்பை சிறிலங்கா அரசு புரிந்து கொள்ளாமல் போனமையுமே காரணமாகும்.இந் நிலை தொடர்ந்தால் போர் நிறுத்த உடன்பாடு மட்டுமல்ல, சிறிலங்கா அரசும் விரைவில் பெ[illegible] நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டி வருவது தவிர்க்க முடி[illegible]தாகி விடும்.

# திருமலையில் பதற்ற நிலையைத் தணிக்க புலிகள்-முஸ்லிம் பிரதிநிதிகள் பேச்சு

திருகோணமலையில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையை தணிப்பது தொடர்பான சந்திப்பொன்று நேற்று திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்குமிடையே நடைபெற்றுள்ளது.

கட்டைபறிச்சானிலுள்ள விடுதலைப்புலிகளின் முன்னரங்க காவல்நிலைகள் அமைந்துள்ள பகுதியிலே இச்சந்திப்பு இடம் பெற்றது. முஸ்லிம் பிரதிநிதிகள் சார்பில் மௌலவிகலீல் தலைமையிலான குழுவினர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். புலிகள் தரப்பில் எழிலன் தலைமையிலான குழுவினர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இரு தரப்பினரிடையேயும் முறுகல்நிலை தொடரா வண்ணம் கொந்தளிப்பு நிலையிலுள்ள தமிழ் மக்களைத்தான் கட்டுப்படுத்திவைத்திருப்பதாகவும் அதே போல் முஸ்லிம் மக்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்படாவண்ணம் பள்ளிவாசல்களின் சம்மேளனம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் இதுவரை ஐந்து தமிழர்கள் காணாமல் போயுள்ளனர். இவர்கள் தொடர்பான தகவல்கள் வெளியாகவில்லை. இது தொடர்பாக கண்காணிப்புக் குழுவினருக்கு எழிலன் எடுத்துக்கூறினார்.

# புலிகளைத் தோற்கடிக்கும் வலிமை சிறிலங்கா இராணுவத்திற்கு உள்ளது

-ஓய்வு பெறும் தளபதி சாந்தகொட்டேகொட

தமிழீழ விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்கும் வலிமை சிறிலங்கா இராணுவத்திற்குள்ளது என்று நேற்று திங்கட்கிழமை ஓய்வு பெற்ற சிறிலங்கா இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட தெரிவித் துள்ளார்.

யாழ். தாக்குதல்கள் தொடர்பாக சாந்தகொட்டேகொட கூறியுள்ளதாவது, யுத்த நிறுத்தத்தை மீறி சிறிலங்கா இராணுவத்தினர் மீது தொடர்ச்சியான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த வாரத்தில் மட்டும் 12 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

சிறிலங்கா இராணுவத்தை ஆத்திரமூட்டும் வகையில் இந்தத் தாக்குதல்களை விடுதலைப்புலிகள் நடத்தி வருகின்றனர்.

கடந்த காலங்களில் சிறிலங்கா இராணுவத் தரப்பில் தோல்விகள் இருந்த போதும் இந்த முறை விடுதலைப்புலிகளை சிறிலங்கா இராணுவம் தோற்கடித்துவிடும். அரச படையினருக்கு எதிராக ஒழுங்கமைக்கப்பட்ட தாக்குதல்களை விடுதலைப்புலிகள் நடத்தி வருகின்றனர்.

கடந்த மூன்று ஆண்டுகளில் நாம் வலுவான பயிற்சிகளைப் பெற்றுள்ளோம். யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு முன்னைய நிலைமைகளை விட நாம் இப்போது தயாராக உள்ளோம். விடுதலைப்புலிகளுடன் போரிடவும் அவர்களைத் தோற்கடிக்கவும் நாம் வலுவாக உள்ளோம் என்றார் சாந்த கொட்டேகொட.

# யாழ்.இல் கொல்லப்பட்ட படையினரின் உடல்களை குடும்பங்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை

- பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரின் உடல்கள் அவர்களின் உறவினர்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தத்தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். இதேவேளை உயிரிழந்த படையினர் ஆறு பேரின் உடல்களும் நேற்றுப்பகல்வரை கொழும்பு பொலிஸ் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தன.

-சுனாமி நிவாரண நடவடிக்கை-

# சனாதிபதி மகிந்தவின் திட்டம் வட-கிழக்கிற்கு விஸ்தரிப்பு

சுனாமி கடல் சீற்றம் காரணமாக பாதிப்படைந்தவர்களுக்கான நிவாரண நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் ஸ்தாபிக்கப்பட்ட ஜய லங்கா திட்டம், தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்திற்கான மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி அமைப்பிற்கான தலைவராக, ரிரன் அலஸ் என்பவர் நியமிக்கப் பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான முல்லைத்தீவு மாவட்டம், மற்றும் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களின் சில பகுதிகளிலும் உள்ள பிரதேசங்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு இந்த அமைப்பு முக்கியத்துவம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# மகிந்த சிந்தனை அமுலாக்கத்தை அவதானிக்க வாசுதேவ தலைமையில் குழு

(கொழும்பு)

சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சிந்தனைகளை, அமுல்படுத்தும் விடயமாக அவதானிக்கும் ஆணைக்குழுவின் தலைவராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார நியமிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அவதானிக்கும் குழுவில் நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்களையும், அரசியல் வாதிகளையும் உள்ளடக்கி 24 உறுப்பினர்கள் இருப்பர் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்தக் குழுவினர் இந்த வாரத்தில் நியமிக்கப்படுவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழு சுதந்திரமான முறையில் இயங்குவதற்கான தன்மையைக் கொண்டிருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(32)

# மூதூரில் நான்கு இளைஞர்கள் பொலிசாரால் கைது

திருகோணமலை கடற்கரைச் சேனைப் பிரதேசத்தில் இருந்து மூதூர் இறங்குதுறைமுகத்தை நோக்கி இயந்திரப் படகொன்றில் வந்து கொண்டிருந்த நான்கு இளைஞர்கள் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நேற்றுப் பிற்பகல் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். சிறிராம் ரவிக்காந்(வயது - 20), யோகராசா சத்தியசீலன் (வயது- 22), பிச்சயமூர்த்தி ஐங்கரன்(வயது - 23), ரட்ணசிங்கம் அருட்செல்வம் (வயது-23) ஆகியோரே கடற்படையினரால் கைது செய்யப்பட்டு திருமலை நகர பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் நால்வரும் இன்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்போவதாக தெரிவித்த சிறிலங்கா பொலிசார் மூதூருக்கான படகுச் சேவைகள் இயங்காமையால் தமது சொந்த அலுவல்களுக்காக இயந்திரப் படகில் இவர்கள் வந் திருக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

# ஹாட்லிக் கல்லூரி காவலரணுக்கு அருகாமையிலுள்ள மக்கள் இடம் பெயர்வு

(நல்லூர்)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி காவலரண்களுக்கு அருகாமையில் இருந்த ஐம்பதிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நேற்றைய சம்பவம் காரணமாக இடம் பெயர்ந்துள்ளார்கள்.

ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க இராணுவம் மற்றும் பொலிசார் தொடர்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட கண்ணீர் புகைக்குண்டுகளை மக்கள் குடியிருப்புக்களுள் அடித்தமையால் இத்தகைய இடம் பெயர்வுகளுக்கு மக்கள் உள்ளாகியுள்ளார்கள்.இராணுவம் தொடர்ந்து காவலரண்களை அமைப்பதை நிறுத்தும் வரை மாணவர்களின் போராட்டம் தொடர்ந்தமையும் குறிப்பிடத் தக்கதாகும். (41)

# யாழ். இல் நடைபெறும் சம்பவங்களுக்கும் எமக்கும் எந்தவித தொடர்பும் இல்லை

## -யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்

(அலுவலக செய்தியாளர்)

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணத்தில் இருந்து எமது போராளிகள் வெளியேறியுள்ளனர். இந்த நிலையில் அங்கு இடம்பெறுகின்ற சம்பவங்களுக்கும் எமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. படையினர் மீதான தாக்குதலை மேற்கொள்ள வேண்டிய தேவை எமக்கில்லை. இராணுவ அராஜகத்தால் ஆவேசமடைந்த மக்கள் ஆர்ப்பாட்டங்களிலும், எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர். மக்களின் பிரச்சினைகளைச் சரியான முறையில் அணுகவேண்டும். இவ்வாறு யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்துள்ளார்.

படைத்தரப்பின் சந்திப்பு இரத்துச் செய்யப்பட்ட நிலையில் முகமாலையில் வைத்து செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், இந்தச் சந்திப்பில் நாங்கள் மிகவும் முக்கியமான விடயங்களை கதைக்கவிருந்தோம். அதாவது யாழ்குடாநாட்டில் விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் எவரும் இல்லை. அனைவரும் வெளியேறிவிட்டார்கள். அவர்கள் வெளியேறியதன் பின்னர் இராணுவ வன்முறை, ஒட்டுக்குழுக்களின் கொலைப் பயமுறுத்தல்கள், கொலைகள் தீவிரமடைந்துள்ளன. இதனைக் கட்டுப்படுத்துமாறு கண்காணிப்புக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தோம். ஆயினும் இது தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்தச் சம்பவம் நடைபெறுவது அரச கட்டுப்பாட்டுப் பகுதி அதனால் படைத்தரப்பே இதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும், இதனை நிறுத்த வேண்டும் இதற்கான உத்தரவாதத்தை வழங்கவேண்டும் என்ற விடயங்களை முன்வைக்கவிருந்தோம். இதற்கான உறுதிப்பாட்டை எடுப்பதும் முக்கியமான நோக்கமாக இருந்தது.

குடாநாட்டில் இயல்புவாழ்வை ஏற்படுத்துவதற்கும், மக்களின் நலனுக்காக எந்தப்பணிகளையும் மேற்கொள்ள நாம் தயாராக இருக்கிறோம். கண்காணிப்புக் குழுவினர் எம்மிடம் மீண்டும் படையினரைச் சந்திக்க வாய்ப்புள்ளதா? எனக்கேட்டனர். தலைமைப்பீடத்தின் முடிவுடன் தான் வந்தோம் அவர்கள் தான் சந்திப்பை ஏற்படுத்தினார்கள். ஆனால் அவர்களே அதனைத் திடீரென நிறுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் கண்காணிப்புக் குழுவின் வேண்டுதலை தலைமைப் பீடத்திற்கு தெரியப்படுத்துவோம். தலைமையின் முடிவின் படி அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடரவோம்.

* நேற்று முன்தினம் இராணுவம் கொல்லப்பட்ட சம்பவம் பற்றி கேட்கப்பட்டபோது;

இப்படி ஒரு சம்பவம் நடைபெற்றதாக கண்காணிப்புக்குழு எமக்குத்தெரிவித்தது. அத்துடன் இதற்கும் உங்களுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா என்றும் கேட்டார்கள். அவர்களுக்கு நாங்கள் தெளிவாகக் கூறினோம் யாழ். குடாநாட்டில் எந்தப் புலி உறுப்பினரும் இல்லை. படையினர் மீது இப்படியான தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டிய தேவை எமக்கில்லை. இதனை நாங்கள் நடத்த வில்லை. இதற்கு எந்தவகையிலும் நாங்கள் காரணமானவர்கள் இல்லை என்று தெளிவாகக் கூறினோம்.

இந்தச் சம்பவங்களுக்கு இராணுவ வன்முறைகள் அதிகரிப்பதால் ஆத்திரப்படுகின்ற மக்களே அதனை மேற்கொள்வதற்கான சூழல் ஏற்பட்டுள்ளது.

இன்றும் ஹாட்லிக் கல்லூரியில் மாணவர்கள் சுதந்திரமான கற்றலுக்கு பங்கம் ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்ட காவலரணால் அங்கு மாணவர்களும், மக்களும் எதிர்ப்புத்தெரிவித்துப் போராட்டம் நடத்துவதாக அறிகிறோம். அதனை இராணுவமும் பொலிசாரும் குண்டாந்தடி மற்றும் கண்ணீர்ப்புகை தாக்குதல்களை மேற்கொண்டிருக்கிறார்கள். இதைவிட உயிர்க் கொலைகளை ஏற்படுத்தும் வகையில் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டிருக்கிறார்கள்.

இப்படியான நிலைமை மக்களை மேலும் கிளர்ந்தெழச் செய்யும். எனவே மக்களுக்குப் பங்கம் வராமல் மக்களின் பிரச்சினைகளை அணுகுமாறு கண்காணிப்புக் குழுவிடம் கேட்டுள்ளோம் என்றார். (லோ, தீ)

## மீசாலையில்...

ஒரு சிப்பாய் காயமடைந்தார் என்றும் சம்பவ இடத்தில் நின்றோர் கூறினர்.இது இவ்வாறிருக்க 7.15 மணியளவில் மீசாலை ஐயா கடைச்சந்தியில் கண்டி வீதி ஓரமாகவுள்ள இராணுவ நிலை மீது இனம் தெரியாதோரால் கைக்குண்டுகள் வீசப்பட்டன.இதில் கடமையில் இருந்த சிப்பாய் ஒருவர் கடுமையானகாயங்களுக்குள்ளானார் இதனையடுத்து புத்தூர் சந்தி தொடக்கம் சங்கத்தானை வரையான கண்டி வீதியை உள்ளடக்கிய பகுதியை சுற்றி வளைத்து இராணுவம் தேடுதல் நடத்தியதுடன் சிலரை கைது செய்தும் சென்றது. பொது மக்களையும் இராணுவம் தாக்கியது இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது. (33)

## அரச..

கண்காணிப்புக் குழு ஊடாக படைத் தரப்பு கோரியிருந்தது. இதனையடுத்து நேற்று மாலை 3.30 மணிக்கு முகமாலை சூனியப் பிரதேசத்தில் இச்சந்திப்பை நடத்துவதாக இரு தரப்பும் தீர்மானித்திருந்தனர்.

இதன்படி யாழ். மாவட்ட படைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனும் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியும் சந்தித்துப் பேசுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. கண்காணிப்புக் குழு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டது. எனினும் குறிக்கப்பட்ட நேரத்தையும் விட அரைமணி நேரம் அதிகமாகிய பின்னர் பிற்பகல் 4.00 மணியளவில் தமக்கு அரச சமாதானச் செயலகத்தில் இருந்து இந்தச் சந்திப்புக்கான நிகழ்ச்சி நிரல் கிடைக்கவில்லை என்று காரணம் கூறி யாழ். மாவட்ட படைத் தளபதி சந்திப்பை இரத்துச் செய்திருந்தார். குறித்த காரணத்திற்காக சந்திப்பு இரத்துச் செய்யப்படுவதாக சுனில் தென்னக்கோன் கண்காணிப்புக் குழு ஊடாக இளம்பரிதிக்கு தகவல் தெரிவித்திருந்தார். (லோ, தீ)

## மாணவர்..

கின்ற கபட நோக்கத்தோடு செயற்பட்டுவரும் இராணுவத்தினரின் செயற்பாடுகளிற்கு எதிராக மாணவர்கள் தொடர்ச்சியான வலியுறுத்தல்களை விடுத்தும் போராட்டங்களை நடத்தியும் தங்களைச் சுதந்திரமாகக் கற்க விடுமாறும் கோரினர்.

ஆனால், அதற்கு சிறிதும் செவி சாய்க்காத சிங்கள அரசும் இராணுவமும் மேலாக சர்வதேச நாடுகளும் வாய் பொத்தி இருந்ததையே கண்டு வந்தோம். எனினும், எமக்கான நீதி கிட்டுமென்ற நிலையில் நாங்கள் அமைதி வழியில் போராட்டம் நடத்தினோம். இன்று நடந்த மிலேச்சத்தனமான நிகழ்வு மாணவர்கள் அமைதிப் போராட்டம் நடத்துவதில் பிரயோசனம் இல்லை என்பதை எடுத்துக்காட்டி நிற்கின்றது. இனிவரும் நாட்களில் மாணவர்களாகிய நாங்கள் தொடர்ச்சியாக மறியல் போராட்டங்களை குடாநாடு எங்கும் விஸ்தரித்து எம் மீதான ஆக்கிரமிப்பினை உடைத்தெறிவோம் என உறுதி கொண்டு மாணவர்களாகிய நாம் எமது போராட்டத்தினை தீவிரப்படுத்தவுள்ளோம். இந்தக் கோரிக்கையோடு இன்று வடமராட்சிப் பகுதியில் எமது போராட்டத்தினை ஆரம்பிக்கவுள்ளோம். எமது பகிரங்கக் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு இன்று மாலைக்கிடையில் சரியான பதிலை இராணுவத் தரப்பு தர மறுக்குமானால் அடுத்து வரும் நாட்களில் மாணவர்களாகிய நாங்கள் எமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை ஏனைய பிரதேச மாணவர்களையும் ஒன்றிணைத்து கல்விச் செயற்பாடு, அரச பணிகள் என்பவற்றினை முடக்கிப் போராடுவோம் என்பதனையும் வலியுறுத்திக் கூறுகின்றோம் என மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது.

## இராணுவத்தின்...

கல்விமான்கள் ஆகியோரைக் கொலை செய்த பின்பு நாங்கள் எமது போராளிகளை எங்களுடைய பிரதேசங்களுக்கு எடுக்க வேண்டிய நிலை உருவானது.

இதன் காரணமாக இப்போது இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிக்குள் வாழ்கின்ற மக்களின் தொடர்பு அற்றவர்களாக நாங்கள் உள்ளோம். மக்கள் கடந்த மூன்றரை வருடங்களுக்கு மேலாக நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தத்தால் தமக்குக் கிடைக்குமென எதிர்பார்த்திருந்த சாதாரண வாழ்வியல் நிலை இதுவரை கிடைக்காததாலும், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீள் வாழ்வளிப்பதற்கான ஒரு கட்டமைப்பை நாங்கள் சமர்ப்பித்து அதுவும் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் மக்கள் பெரும் அவலமான நிலையில் உள்ளனர். இந்நிலையில் பொங்கியெழுந்து தமது எழுச்சியை வெளிப்படுத்தி மக்கள் இப்போது விரக்தியின் விளிம்பில் நிற்கின்றனர்.

இந்த வகையில் ஒரு அரசியல் வெறுமைக்குள் தள்ளப்பட்டிருப்பதாலும், அன்றாட வாழ்க்கையில் இராணுவத்தின் பிரசன்னம் அவர்களுக்கு மிகவும் நெருக்கடியைக் கொடுத்து வந்ததோடு, இராணுவத்தினராலும், ஆயுதக் குழுக்களாலும், பொதுமக்கள் கொலை செய்யப்படுகின்றபொழுது அவர்கள் கிளர்ந்தெழுவதை எம்மால் கட்டுப்படுத்த முடியாதிருக்கின்றது. இதற்கு நாங்கள் புதிதாக ஒரு தீர்வினைத் தேட வேண்டிய அவசியமில்லை. யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு அப்பாலும், வேறு மனித உரிமை அமைப்புக்கள் வரவேண்டிய தேவை இல்லாத அளவுக்கு இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்குள்ளே கொலைகள் வன்முறைகள் அற்ற விதத்தில் சமூகம் நடப்பதற்குரிய தேவையான அம்சங்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான ஆவணமாக யுத்த நிறுத்த ஒப்பந்தம் உள்ளது. அந்த ஒப்பந்தத்தை சரியாக அமுல்படுத்தாததன் காரணத்தினாலேயே இந்த அவலமான நிலை ஏற்பட்டுள்ளது. எனவே சர்வதேச சமூகமோ மனித உரிமைகளில் அக்கறையுள்ள எந்த அமைப்புமோ முதலில் செய்ய வேண்டியது ஏற்கனவே இரு தரப்பாலும், இணக்கம் காணப்பட்ட ஒரு யுத்த நிறுத்த ஒப்பந்தம் முழுமையான ஒரு ஆவணம் என்ற வகையில் காத்திரமான முறையில் அதை செயற்படுத்தக்கூடிய விதமாக சிறிலங்கா அரசு தனது கடப்பாடுகளை நிறைவேற்றாத இடங்களில் அதை நிறைவேற்றும்படி செய்தால் மக்கள் இயல்பு நிலை கிடைத்து விட்டதென ஓரளவுக்கு அமைதி கொள்வார்கள். பல ஆயிரக்கணக்கான போராளிகளை விதைத்து எண்பதாயிரம் வரையான மக்களை இழந்த நிலையில் பல இலட்சக்கணக்கானோர் நாட்டை விட்டு இடம்பெயர்ந்து பிற தேசங்களில் அகதியாக வாழ்கின்ற நிலையில் இந்த சர்வதேச பிரசன்னத்துடனான யுத்த நிறுத்த ஒப்பந்தம் தமக்கு இயல்பு நிலையைத் தருமென்று கொண்டிருந்த நம்பிக்கையை முற்றாக இழந்தது. விரக்தியடைந்துள்ளார்கள். அந்த விரக்தி நிலையை இல்லாமல் செய்வதற்கு ஒரேயொரு சுமுகமான வழியாக இருப்பது. இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையை அமுலாக்கம் செய்வதே. குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் நிறைவேற்ற வேண்டிய நிறைய அம்சங்கள் அந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இருக்கின்றது. ஆகக்கூடியது 160 நாட்களுக்குள் இந்த ஆயுதம் தரித்த இராணுவத்தின் பிரசன்னம் இல்லாத ஒரு சகஜ நிலை மக்களுக்கு தோன்ற வேண்டுமென அவ்உடன்படிக்கையில் சொல்லப்பட்டிருந்தும் கூட இன்னும் இயல்பாக தமது சொந்தப் பிரதேசங்களுக்குப்போய் வாழ முடியாத ஒரு இடர்பாடும் நெருக்குவாரமும் இருக்கின்ற காரணத்தினால் அவர்களை அடங்கிப்போகுமாறு கேட்டதற்கான தார்மீக உரித்து எங்களிடம் இல்லாதிருக்கின்றது. நாங்கள் அதை அவர்களிடம் கேட்க முடியாதவர்களாக இருக்கின்றோம். ஏனென்றால் சமதரப்பாக ஒரு ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டு விட்டு அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தாமலிருக்கின்றதனால் ஏற்பட்டுள்ள இந்நெருக்கடியை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றோமென குற்றம் சுமத்தப்படுகின்றது. ஆனால், எங்களால் மக்களை கட்டுப்படுத்துவதற்கான வழி இல்லாதிருக்கின்றது. ஆனால், இதற்கு இலகுவான வழி ஒன்று இருக்கின்றதென்பதை நாங்கள் வருகின்ற அனைவரிடமும் வலியுறுத்தி வருகின்றோம். நோர்வேத் தரப்பிடமும் கண்காணிப்புக் குழுவிடமும் கூறியுள்ளோம். இந்த உடன்படிக்கையின் 1.8 ஆம் பகுதி அமுலாக்கப்பட வேண்டும். கொலைகள் நிறுத்தப்பட வேண்டும். ஏனென்றால் கொலைகள் செய்வது ஆயுதக் குழுக்கள்தான். இதற்கான போதிய தடையங்கள், ஆதாரங்கள் என்பன இருக்கின்றன. அவர்கள் இராணுவத்தினருடன் இணைந்து அவர்களின் உதவியுடன் தான் இவ்வாறான கொலைகளையும் செய்கிறார்கள். இவற்றை நாங்கள் பல தடவைகள் வலியுறுத்திக் கூறியும்கூட அவர்கள் இதனைக் கடைப்பிடிக்கத் தவறியதன் காரணத்தினாலேயே இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன. ஆகவே, சர்வதேச சமூகத்திற்கு ஒரு கடப்பாடு இருக்கின்றது. இந்த தேசத்திலுள்ள இனமுரண்பாடு நீங்கி ஒரு நிரந்தர அரசியல் தீர்வு வருவதற்கான ஆயத்த நிலையாகத்தான் இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தம் கருதப்பட்டது. இவ் ஒப்பந்தமென்பது ஒரு முழுமையான அரசியல் தீர்வல்ல. அரசியல் தீர்வை நோக்கிய பேச்சுக்களை நடத்து வதற்கான கள நிலையை உருவாக்கி அதாவது, மக்களுக்கு இயல்பு வாழ்க்கையை உருவாக்கி நம்பிக்கையை கட்டி எழுப்பிய பின் நீண்ட காலமெடுக்கக்கூடிய ஒரு அரசியல் தீர்வை அடைவதற்கான பேச்சுக்களை நடத்துவதற்கு ஆயத்தப்படுத்துவது.

தமிழ் மக்கள் வேறு விடுதலைப்புலிகள் வேறு என்றோ புலிகளின் ஆதரவாளர்கள் தான் இவ்வாறான சம்பவங்களில் ஈடுபடுகின்றார்கள் என்றோ குறிப்பிட முடியாது. ஏனெனில், தமிழ் மக்கள் அனைவரும் விடுதலைப்புலிகளே தமது பிரதிநிதிகளென முன்னர் நடந்த தேர்தலிலும் 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற சனாதிபதித்தேர்தலில் வாக்களிக்காததன் மூலமும் தெரிவித்திருக்கின்றார்கள். ஆனால், நாங்கள் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிக்குள் பிரசன்னமாகியிருக்க முடியாததன் காரணத்தால் எங்களால் மக்களுடன் உறவாடி இந்நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாதுள்ளது. மக்கள் தாமாக கிளர்ந்தெழுந்த வண்ணமுள்ளார்கள். ஆகவே இதைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் ஆயுதக்குழுக்கள் இல்லாத நிலை உருவாக வேண்டும். இராணுவ மக்கள் மீதான நெருக்கு வாரங்களை குறைத்துக் கொள்ள வேண்டும். இவை எல்லாம் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் குறிபிடப்பட்டிருக்கின்றது. ஆகவே நாம் மீண்டும் மீண்டும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அமுலாக்குமாறு வலியுறுத்தி வருகிறோம். ஆனால், திருத்தங்கள் செய்ய வேண்டிய தேவை அற்ற ஒரு ஆவணமாகத்தான் நாங்கள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைப் பார்க்கின்றோம் என அவர் மேலும் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் நேற்றுப் பிற்பகல் ஐந்து மணியளவில் ஆரம்பமான இப்பேச்சுக்கள் சுமார் ஒரு மணி நேரம் வரை நீடித்தது. இச்சந்திப்பில் விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனும் கலந்து கொண்டார். (ச)

## தனங்கிளப்பில்..

கொண்டதாகவும் கூறப்படுகின்றது.

இந்த வேட்டோசைகளைக் கேட்ட போது இரு வேறு தரப்பினர்களிடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது போல இருந்ததாகவும், இதனையடுத்து கடற்கரையோரத்தில் உலங்கு வானூர்தி ஒன்று தாழப்பறந்ததாகவும் அப் பகுதி வாசிகள் கூறுகின்றனர்.

இதனால் அங்கு பெரும் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டுள்ளது. (33)

## நீர்வேலியில்...

மக்களை தகாதவார்த்தைகளால் திட்டுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றன. கைது செய் யப்பட்ட இளைஞர் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவில்லை என தகவல்கள் தெரிவிக்கப்படுகிறது. நீர்வேலிப்பகுதியில் இயல்பு நிலை முற்றாக பாதிப்படைந்துள்ளது. (கீ)

## ஹாட்லிக்..

வேலாயுதம் மகாவித்தியாலயம் உட்பட பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டு சுலோக அட்டைகள், பதாகைகள் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து மாணவர்களைச் சமரசம் செய்யுமுகமாக பொலிஸ் அதிகாரிகள் அழைத்துள்ளனர். பாடசாலை அதிபர் எம். இராஜஸ்காந்தன் (ஹாட்லிக் கல்லூரி) உட்பட ஆசிரியர்களும், மாணவர் தலைவர்கள் நான்கு பேரும் இராணுவ முகாமுக்குள் அழைத்துச் செல்லப்பட்டு பேச்சில் ஈடுபட்டனர். இருந்தும் மாணவர்களின் கோரிக்கைகளுக்கு எந்த முடிவும் எட்டப்படாத நிலையில் விரக்தியடைந்த மாண வர்கள் இராணுவத்தினரை நோக்கிக் கற்களை வீசினர். இதனையடுத்து இராணுவத்தினர் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினர். இதனால் வீறு கொண்ட மாணவர்கள் இராணுவக் காவலரணை நோக்கி மீண்டும் கற்களை வீசி தாக்குதல் நடத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இராணுவத்தினர் கண்மூடித்தனமாக தொடர்ந்து கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசி தடியடி நடத்தி மாணவர்களை அச்சுறுத்திய நிலையிலும் மாணவர்கள் தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

இச்சம்பவத்தில் கண்ணீர்ப்புகைக் குண்டுகளால் பல மாணவர்கள் பாதிக்கப்பட்ட நிலையிலும் இராணுவத்தினர் தொடர்ந்து கண்ணீர் புகைக்குண்டுகளை அடித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் செய்தி சேகரிக்க வந்திருந்த ஊடகவியலாளர் ஒருவர் கண்ணீர்ப் புகைக் குண்டு பட்டதில் கையில் காயமடைந்தார். இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியதில் இராணுவ முகாமுக்கு அருகில் வசித்த குடும்பங்கள் சில இடம்பெயர்ந்து சென்றுள்ளனர்.

"எமது கல்விக்கு இடையூறாக இராதே", மாபெரும் சக்தி மாணவர்சக்தி, "போரின் வலியை உணர்ந்தவர்கள் நாங்கள்" மீண்டும் எம்முடனா? இராணுவமும், ஈ.பி.டி.பி.யும் கூட்டாக கல்விக்கு குழிபறிக்கும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்து, பொறுமையின் எல்லையில் இருக்கும் எம்மை போராட்டத்தினுள் திணிக்காதே, பேரினவாதக் கும்பலே மாணவர்களுக்கு துரோகம் இழைக்காதே ஆகிய சுலோகங்களை மாணவர்கள் தாங்கி நின்றனர். (41, கா)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.